பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 05 வெள்ளிக்கிழமை 21.07.2023 கதிர் 252

## இது ரகசியம் அல்ல!

வடக்கில் காலத்திற்குக் காலம் ஒவ்வொரு தரப்பினருக்கு வாழ்க்கை அமோகமாக இருக்கும். ஒரு காலத்தில் மண்ணெண்ணெய் வியாபாரிகள் வாழ்ந்தார்கள். மணித்தியாலத்திற்கு ஒரு விலை என விலையை உயர்த்தி விற்ற காலம் அது. அண்மையில் சிலிண்டர் விற்கும் கடைக்காரர்கள் காட்டில் மழை. 4

கொஞ்சநாள்களுக்கு முன்னர் பெற்றோல் செற்காரர்களுக்குத்தான் காலம். பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களைக் கண்டாலே மக்கள் அஞ்சி அடங்கி ஒடிய காலமும் ஒன்றிருந்தது. கொரோனா காலம். பொலிஸாரைக் கண்டால்கூட அந்தளவுக்கு கிலி ஏற்பட்டதில்லை என்றிருந்தது அந்தக் காலம்.

இப்படிஆளுக்கொருகாலம்என்றால்இன்று மொழிபெயர்ப்பாளர்களின் காலம், உடனே நீங்களாக ஏதாவது கற்பனைகளுக்குப் போய்விடாதீர்கள்.

கடந்த இரு நாட்களாக ஒரு ஆவணத்தைஅங்கீகாரம்பெற்றஉத்தியோகபூர்வ அரச மொழிபெயர்பாளர் மூலம் மொழி பெயர்ப்பதற்காக ஓடித் திரிந்திருக்கிறார் நண்பர். குடாநாட்டில் உள்ள 7 மொழி பெயர்ப்பாளர்களின் வீடுகளுக்கு

☞2

# இந்தியா சென்ற ரணில் இன்று மோடியுடன் பேச்சு

## தமிழர் விவகாரமும் கலந்துரையாடப்படும்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரண்டு நாள் பயணமாக நேற்று இந்தியத் தலைநகர் புதுடில்லியைச் சென்றடைந்தார். விமான நிலையத்தில் அவரை இந்திய அயலுறவுத்துறை இணை அமைச்சர் வி.முரளிதரன் வரவேற்றார்.

ரணில் ஜனாதிபதியாகப் பதவியேற்று ஒரு வருட காலத்தின் பின்னர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பின் பேரில் அவர் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளார். இன்று அவர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து



இரு தரப்பு உறவுகள் குறித்த பல விடயங்களையும் பேசுகின்றார்.

இந்தப் பேச்சில் ஈழத்தமிழர்களின்

☞2

## ஆர்ப்பாட்டம் நடத்தத் தடை

கொழும்பு டீன்ஸ் வீதி, வைத்தியசாலை சதுக்கம்உள்ளிட்டவீதிகளில்ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கத் தடை விதித்து நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதற்கமைய இன்று முற்பகல் 8.30 மணி முதல் நாளை முற்பகல் 8.30 மணி வரையில் குறித்த பகுதிகளில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மாளிகாவத்தைப்பொலிஸார்முன்வைத்த கோரிக்கைக்கு அமைய மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றத்தால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (02)

## முன்னாள் படைச் சிப்பாய் கழுத்தறுத்துப் படுகொலை

குழு மோதலில் முன்னாள் படைச் சிப்பாயான குடும்பஸ்தர் ஒருவர் படு கொலை செய்யப்பட்டார்.

மொனராகலை - படல் கும்புரை பகுதியில்ல் புதன் கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில்மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழுந்தார்.

இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் கொல்லப்பட்ட குடும்பஸ்தர்கத்தியால்கழுத்தறுத்தறுக் கப்பட்டதில் உயிரிழந்தார்.

படல்கும்புரை பிரதேசத்தைச்சேர்ந்த 47 வயதுடைய அஷங்க பண்டார என்பவரே இவ்வாறு கொலை செய்யப் பட்டார்.

உயிரிழந்த குறித்த குடும்பஸ்தர் இராணுவத்தில் கடமையாற்றினார் என்றும், கடந்தமூன்றுவருடங்களுக்கு முன்னர் அவர் பணிநீக்கம் செய்யப்பட்டிருந்தார் என்றும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தக் கொலை தொடர்பில் நால்வரைக் கைது செய்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (02)

# தமிழர்கள் கேட்பது தமது உரிமைகளை தருவதைப் பிடி என பிச்சை போடாதீர்

## நாடாளுமன்றில் சாணக்கியன் முழக்கம்

'தமிழர்கள் கேட்பது உரிமையை, தருவதைப் பிடி என்று பிச்சை போடவேண்டாம்' என்று நாடாளுமன்றத்தில் முழங்கினார் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன்.

சபையில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். தமிழ்க் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி நடத்திய பேச்சில் பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தப் போகிறார் என்று ஜனாதிபதி தெரிவித்த கருத்துக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி, ரணில் ராஜபக்சவாக இருந்தால் என்ன, ரணில் விக்கிரமசிங்கவாக இருந்தால் என்ன எமக்குப்பிரச்சினை இல்லை.

இந்த நாட்டில் எம் தமிழருக்கு உரிமை உண்டு. 'தமிழருக்கு நான் இதுதான் தருவேன் எடுத்துக்கொள்ளுங்கள்' என்று எமக்குப் பிச்சை போட்டு எம்மை ஏமாற்ற வேண்டாம்.

ஜனாதிபதி ரணிலும் விரைவில் வீடு செல்ல வேண்டி வரும்.

எமக்கான உரி

☞2



## தமிழர்கள் ரணிலிடம் தீர்வை எதிர்பார்ப்பது முட்டாள்தனம்

### ஜேவிபி தலைவர் கருத்து

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அரசியல் தீர்வை எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது என்று தேசிய மக்கள் சக்தியின் (ஜே.வி.பி) தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்தியப் பயணத்திற்கு முன்னர் தமிழ்க் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கநடத்திய சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

'தான் ரணில் ராஜபக்ச அல்ல ரணில் விக்கிரமசிங்கதான் என்று தமிழ் மக்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் ஜனாதிபதி கூறியது நகைப்புக்குரியது. தற்போது ரணில் - ராஜபக்ச ஆட்சிதான் அதிகாரத்தில் உள்ளது. ராஜபக்சக்கள் பட்டாளத்தின் ஆசியில்தான் ஜனாதிபதி கதிரையில் ரணில் இருக்கின்றார். எனவே, ராஜபக்சக்களின் குணாதிசயங்கள் ரணிலிடம் உண்டு.

அவரிடம் தமிழ் மக்கள் - அவர்களின்

☞2

## காணி அபகரிப்பை நேரில் தடுத்து நிறுத்திய மனோ!



கொழும்பு மாவட்ட அவிசாவளை பென்ரித் தோட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட நான்கு ஏக்கர் காணியை தம்ரோ பெருந்தோட்ட நிறுவனம் அபகரிக்க எடுத்த முயற்சியைக் களத்துக்கு விரைந்த தான் தடுத்து நிறுத்தினார் என்று கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் முற்போக்குக்கூட்டணியின்தலைவருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

மக்களுக்கு ஒதுக்கப்பட்ட இந்தக் காணியை புஸல்லாவ பெருந்தோட்ட நிறுவனத்திடமிருந்து, உள்குத்தகைக்குப் பெற்ற தம்ரோ பெருந்தோட்ட நிறுவனம், சுற்றி முள்வேலி அமைத்து, அதற்குள் பெக்கோ

☞2

## கறுப்பு ஜூலை நினைவாக பிரான்ஸில் கல் திரைநீக்கம்

### மரமும் நடப்பட்டது

தமிழர்கள்மீது 1983ஆம் ஆண்டு இனக் கலவரம் கட்டவிழ்த்துவிடப்பட்டதன் 40ஆவது ஆண்டு நினைவு நாளையொட்டி பிரான்ஸ் நாட்டில் நினைவுக்கல் திரை நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

தலைநகர் பாரிஸின் புறகரமான பொண்டியில் இந்த நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ளது. பொண்டி நிகர சபையால் அங்குள்ள பூங்கா ஒன்றில் கறுப்பு ஜூலை நினைவாக மரம் நடப்பட்டதுடன் நினைவுக்கல்லும் திரை நீக்கம் செய்யப்பட்டது.

உள்ளூர் நேரப்படி 6.30 மணியளவில் நகர சபை முதல்வர், உதவி முதல்வர்கள், உறுப்பினர்கள் இணைந்து இந்த நிகழ்வில் பங்கேற்றனர். பொண்டி நகர சபை முதல்வர் நினைவுக் கல்லைத்திரைநீக்கம்செய்து வைத்தார்.

கறுப்புஜூலைதொடர்பாக உலகில்திறக்கபட்டமுதலாவது நினைவுக் கல் இதுவாகும்.

## ஜனாதிபதியின் பதில் செயலராக பெண் ஒருவர் நேற்று நியமனம்

### வரலாற்றில் முதல் தடவையாக சம்பவம்



ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இந்தியாவுக்குச் சென்றுள்ள நிலையில், சாந்தனி விஜேவர்த்தன ஜனாதிபதியின் பதில் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இப்படி பதில் செயலாளராக பெண் ஒருவர் நியமிக்கப்படுவதுவரலாற்றில் இதுவே மு-தற்றடவை.

நேற்று (20) முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதுடன், ஜனாதிபதியின் செயலாளர் நாடு

☞2

## தலைவர் சிவசிதம்பரத்தின் பிறந்த நூற்றாண்டு நிகழ்வு

### கரவெட்டியில் நேற்று சிறப்புற்றது



மறைந்த முன்னாள் தமிழ்த் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சிவசிதம்பரம் பிறந்தநாள் நூற்றாண்டு நிகழ்வும் ஆவண நூல் வெளியீடும் 'தலைவர் சிவா 100' எனும் தலைப்பில் யாழ்ப்பாணம் கரவெட்டியில் நேற்று இடம்பெற்றன.

கரவெட்டி சம்பந்தர் கடையடி மகேசன் விளையாட்டுக்கழக மைதானத்தில் பிற்பகல் 3 மணியளவில் தொடங்கிய நிகழ்வு இரவும் தொடர்ந்தது.

சிவசிதம்பரம் அவர்களின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் நிகழ்வு தொடங்கப்பட்டது. .

'தலைவர் சிவா 100' என்கிற நூற்றாண்டு நினைவு ஆவண மலர் வெளியிடப்பட்டதுடன் தமிழர்

☞2

## நீண்ட கால ஹெரோயின் வியாபாரி மாட்டினார்

யாழ் நீண்ட காலமாக ஹெரோயின் வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த நபர் ஒருவரை 5 மில்லி கிராம் ஹெரோயினுடன் தாம் கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குருநகரைச் சேர்ந்த 23 வயதான ந்தேகநபரே யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிசாரால் கைது செய்யப்பட்டார்

கடந்த ஜூன் மாதம் குருநகர் பகுதியில் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த

☞2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

ஏறிஇறங்கியபோதும் அவர்களில் யாரும்அவரது வேலையைப் பொறுப்பெடுக்கத்தயாரில்லை. எல்லோரும்கடும்பிஸி.தலைக்குமேல் வேலை கிடப்பதால், நண்பரின் வேலையை நிராகரித்துவிட்டார்கள். கடைசியில் 8ஆவது மொழிபெயர்ப்பாளர்தான் மனரமிங்கி நண்பரின் வேலையை முடித்துக் கொடுத்தார்.

மொழிபெயர்ப்பாளர்களுக்கு அப்படி என்னதான் வேலை குவிந்து கிடக்கிறது என்று தோடினால், கனடா விசா பெற்றுவிடத் துடிக்கும் ஆயிரக் கணக்கானோர் தமது சான்றிதழ்கள் முதல் வீடு, காணி உறுதி வரை எல்லா ஆவணங்களையும் மொழிபெயர்ப்பிற்கு வழங்கியிருப்பதால் ஒவ்வொரு மொழிபெயர்ப்பாளர்வீட்டிலும் 50முதல்100கோவைகளால் நிரம்பி இருப்பதாகத் தகவல். அவற்றை முடிக்காமல் புதிய பணியை ஏற்க மொழிபெயர்ப்பாளர்கள் தயக்கம் காண்பிக்கின்றனர்.

இவ்வளவு பேருக்கும் கனடா விசா கிடைக்குதோ இல்லையோ மொழிபெயர்ப்பாளர்களிற்கு வருமானம் கொட்டும் காலம்.

இங்கே13மட்டுமா,13உடன் சமஷ்டியுமா, சமஷ்டிமட்டுமா, சமஷ்டியுடன்தேசமுமாஎன்று அரசியல்வாதிகள்பட்டமன்றம் நடத்திக்கொண்டிருக்க, ஆளை விடுங்கடா சாமி என்றுஓடித்தப்பமுனைப்பாக இருக்கிறார்கள்மக்கள். சிறப்பு!

**இடிமின்னல்**
(Idiminnal23@gmail.com)

## இந்தியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல்தீர்வு குறித்த விடயமும் கலந்துரையாடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இது தொடர்பாக ரணிலுக்கு இந்தியப் பிரதமர் அழுத்தம்கொடுக்கவேண்டும் என்று தமிழ் அரசுக் கட்சி, ஜனநாயகக்கூட்டணிமற்றும் தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, சிவாஜிலிங்கம், தமிழ்சிவில்சமூகம்எனப்பல தரப்புக்கள் பிரதமர் நரேந்திர மோடிக்குக் கடிதங்கள் எழுதியிருக்கின்றன.

நேற்றுப் புதுடில்லியைச் சென்றடைந்த ரணிலை மாலையில் இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தப் பயணத்தில் இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்முவுடனும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடனும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் பல ஒப்பந்தகளும் ரணிலின் இந்தப் பயணத்தின்போது கைச்சாதிடப்படவுள்ளன.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கானஉத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ளமையால், அவரின் கீழ் உள்ள அமைச்சுக்களின் பொறுப்புக்கள், அதன் இராஜாங்க அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும்தெரிவித்துள்ளது. (02)

## தமிழர்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைகளைச் சரியான முறையில் தராவிடின் நாட்டுக்கான கடன் அதிகரிக்குமே தவிர முதலீடுகள் கிடையாது.- என்றார். (02)

## காணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மண்ண கழ்வு இயந்திரம் மூலம் துப்பரவு செய்து, குழி தோண்டி புதிய இறப்பர் கன்றுகளை நட்டு, நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருந்தது.

இது பற்றி கட்சி பிரதிநிதிகள் மற்றும் பிரதேச மக்கள் தெரிவித்த புகாரை அடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற மனோ கணேசன் தலைமையிலானகுழுவினர் பெருந்தோட்ட நிறுவனத்தின் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தினர் என்று மனோ வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் நடைபெற்ற சம்பவத்தின் போது, மனோ எம்.பியுடன் கட்சியின் மக்கள் பிரதிநிதிகள், பாலசுரேஷ்குமார், பிரியாணி குணரத்ன, பாலச்சந்திரன் அப்பாதுரை, எஸ். தங்கதுரை மற்றும் மோசஸ் ஆகியோர் உடனிருந்தனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் செல்லும் முன், முதலில் அவிசாவளை பிரதேச செயலகத்துக்குச் சென்று பிரதேச செயலாளர் தில்ஹானியை சந்தித்த மனோ, மக்களுக்கு ஒதுக்கப்பட்டகாணியைப்பாதுகாக்கும் கடமையில் இருந்து அவர் தவறிஉள்ளார்என்றுகுற்றஞ் சாட்டினார்.

இது தொடர்பில் மனோ ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

நல்லாட்சியின்போது கொழும்பு - அவிசாவளை பென்றித்தோட்டபிரதேசத்தில் அமைந்துள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ஏற்பட்ட வாயு கசிவில் அங்கு விபத்து ஏற்பட்டு, அயல் குடியிருப்பு மக்கள் பெரும் ஆபத்தைச் சந்தித்தனர். இதனால் மாற்று இடம் ஏற்பாடுசெய்து, அதற்காக நான்கு ஏக்கர் காணியை அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்து நான் பெற்றேன். அதற்கான நிதியும் எனது அமைச்சால் செலுத்தப்பட்டது. இந்நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதால் அந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டது.

இதைப்பயன்படுத்தியே இங்கே வாழும் தமிழ்க் குடும்பங்களுக்கு ஒதுக்கித் தரப்பட்ட இந்த நான்கு ஏக்கர் காணியைத் தோட்ட நிறுவனம் தந்திரமாக அபகரிக்க முயன்றுள்ளது.

ஒருவேளை நான் மீண்டும் அமைச்சராகி இதைச் செய்யவேண்டும் என அதிகாரிகள் நினைத்தார் களோ தெரியவில்லை. அல்லதுநான் மீண்டும் அமைச்சர் ஆக மாட்டேன் எனவும் அதிகாரிகள் நினைத்தார்களோ தெரியவில்லை. எது எப்படி இருந்தாலும், எனக்கு எதிரணியும் ஒன்றுதான். ஆளும் அணியும் ஒன்றுதான் என்று இன்றுஇங்கேஇந்தஅதிகாரிகளிடம் கூறினேன். தற்போது இந்தத்துர் முயற்சி நிறுத்தபட்டுள்ளது. இது தொடர்பில், கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் கலந்துரையாடி காணித் துண்டுகளைச்சம்பந்தப்பட்டகுடும்பங்களுக்குநாம் பிரித்து வழங்குவோம்.' - என்றார்.(02)

## தலைவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைக் கூட்டணி யின் தலைவர் வீ. ஆனந்த சங்கரிக்கு பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னம் வழங்கிமதிப்பளிக்கப்பட்டது..

யாழ்ப்பாணப்பல்கலைக் கழகபேராசிரியர்கு.மிகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லீம்காங்கிரஸ்தலைவர் ரவூப் ஹக்கீம், பேராசிரியர் வி.ரி.தமிழ்மாறன், பேராசிரியர் சி.சிவலிங்கராசா, தினக்குரல் முன்னாள் பிரதம ஆசிரியர் வீ.தனபாலசிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சிவசிதம்பரம் அவர்களின் மகள் நிராஞ்சலி தேவராஜ் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்வில் இலங்கை தமிழரசுக்கட்சியின்தலைவர் மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், தமிழ் மக்கள் கூட்டணியைச் சேர்ந்தவரான வி. மணிவண்ணன் உள்ளிட்ட பல அரசியல் பிரமுகர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

முருகேசு சிவசிதம்பரம் (ஜூலை 20, 1923 - ஜூன் 5, 2002) இலங்கைத் தமிழ் அரசியலில் நீண்டகாலம் செயற்பட்டவர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக இருந்தவர். இலங்கை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஒரு வழக்கறிராவார். நாடாளுமன்ற துணை சபாநாயகராகவும் 1968 முதல் 1970 வரை பணியாற்றியவர்..

முன்னதாக நேற்றுக் காலை சிவசிதம்பரத்தின் கரவெட்டி இல்லத்திலும் நெல்லியடியில் அமைந்துள்ள சிவசிதம்பரததின் சிலையடியிலும்அஞ்சலிநிகழ்வுகள் இடம்பெற்றன.

## ஜனாதிபதியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பும்வரை இது அமுலில் இருக்கும்.

சிரேஷ்ட அரச அதிகாரியான சாந்தனி விஜேவர்த்தனதற்போதுஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளராகக் கடமையாற்றி வருகின்றார்.1994 ஆம் ஆண்டு இலங்கை திட்டமிடல்சேவையில்இணைந்து கொண்டதிருமதி விஜேவர்த்தன, திறைசேரியில் 22 வருடங்களாகப் பல்வேறு பதவிகளை வகித்து வந்ததோடு இறுதியாக திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகப் பணியாற்றினார்.

2015 முதல் 2019 வரை அபிவிருத்தி மூலோபாயம் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின்செயலாளராகவும் சாந்தனி விஜேவர்த்தன பணியாற்றியுள்ளார்.

காலிசவுத்லண்ட் பெண்கள் கல்லூரியின் பழைய மாணவியான இவர், ருஹூணு பல்கலைக் கழகத்தின் கலைப்பீடத்தில் முதுமாணிப் பட்டம் பெற் றுள்ளதோடு நெதர்லாந்தின் ஹேக் நகரில்பிராந் திய பொருளாதார அபிவி ருத்தி தொடர்பான பட்டப்பின் படிப்பைப் பூர்த்தி செய்துள்ளார். (02)

## ஜேவிபி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிகள் தீர்வை எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது.' - என்றார். (02)

## நீண்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த நபரை கைது செய்வதற்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையினர்முயற்சித்த போது தப்பியோடி கோப்பாய் பகுதியில் மறைந்திருந்தார்.

நேற்று குருநகரில் ஹெரோயின் விற்பனை செய்வதற்க வந்தது குறித்த தகவல் கிடைத்ததும் யாழ் மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர் மீது ஏற்கனவே பத்துக்கும் மேற்பட்ட ஹெரோயின் வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. குறித்த நபர் நீண்ட காலமாக ஹெரோயின் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகிறார் என்று பொலிஸார்தெரிவிக்கின்றனர்.

# பிரபாகரனுக்கு வழங்கிய வாக்குறுதியை இந்தியப் பிரதமர் நிறைவேற்றவேண்டும்

## நாடாளுமன்றத்தில் கஜேந்திரன் வலியுறுத்து

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை புதுடில்லிக்கு அழைத்துப் பேசிய அப்போதைய இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி, "உங்களுக்கு நாங்கள் ஒரு சுயாட்சியை உருவாக்கித்தருவோம்"என்று உத்தரவாதம் வழங்கினார். அந்த உத்தரவாதத்தை நிறைவேற்ற, இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி ரணிலுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்கவேண்டும்.

இவ்வாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற உத்தேச மத்திய வங்கி சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் வீழ்ச்சிக்கு சிங்கள - தமிழ் இனங்களுக்கிடையிலான முரண்பாடே முக்கிய காரணம். தமிழர்கள் உரிமை கேட்கின்றபோது சிங்கள மக்களின் இருப்பு இல்லாமல் போய்விடும் என்று சிங்கள மக்களுக்கு அப்பட்டமான பொய்களை சிங்களஅரசியல் தலைவர்கள் சொல்லிச் சொல்லியே முறைகேடான ஆட்சியை கொண்டு நடத்தப் பழக்கப்பட்டு விட்டனர். இந்த நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமானால் முதலில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு சென்றுள்ளார். இந்நிலையில் உயரிய சபை ஊடாக இந்திய அரசிடம் ஒரு கோரிக்கையை விடுக்க விரும்புகின்றேன். 1987 ஆம் ஆண்டு வடமராட்சி மீது இராணுவம் ஒரு பெரும் இன அழிப்புப் போரை மேற்கொண்டது. அந்தப் போருக்கு எதிராக விடுதலைப்புலிகள் போராடினார்கள்.

அந்தப் போரில் நெல்லியடியில் மில்லர் நடத்திய தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாது இராணுவம் திணறிய நிலையில் அப்போதைய ஜனாதிபதி ஜே .ஆர். ஜெயவர்த்தன ஓடிப்போய் இந்தியாவின் காலடியில் விழுந்தார். அந்த சந்தர்ப்பத்தில்தான் இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானது.

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் அடிப்படையில் தான் இலங்கை -இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானதாக கூறப்பட்டது. அப்போது தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடிய விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை புதுடில்லிக்கு அழைத்து பேசிய அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி பிரபாகரனிடம் "ஒரு சுயாட்சியை உருவாக்கித்தருவோம் '' என்ற உத்தரவாதத்தை கொடுத்திருந்தார்.

அந்த அடிப்படையில் தான் ஆயுதங்கள் இந்தியாவிடம் கையளிக்கப்பட்டன. அந்த உத்தரவாதம் இன்று வரை இந்தியாவினால் நிறைவேற்றப்படவில்லை. எனவேதான் இன்று இலங்கை ஜனாதிபதி இந்தியா சென்றுள்ள நிலையில் இந்த இடத்திலிருந்து நாம் இந்திய பிரதமர் நரேந்திரமோடியிடம், இலங்கையில் தமிழ் தேசம் இறைமை அங்கீகரிக்கப்பட்ட ஒரு அரசியல் தீர்வை எட்டுவதற்கான அழுத்தத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்தியா கொடுக்க வேண்டும் என்று கேட்கிறோம்.

இலங்கை -இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் தமிழர்களுக்கான அரசியல் உரிமைகள் வழங்கப்பட்டிருக்கவேண்டும்.

ஆனால் அது வழங்கப்படவில்லை. 13ஆவது திருத்தச் சட்டத்தை தமிழ் மக்கள் ஒருபோதுமே ஏற்கத்தயாரில்லை. எனவே தமிழ் தேசம்,இறைமை,சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட்ட தீர்வு எட்டப்பட வேண்டும்.

இந்ததீர்வைஎட்டுவதற்கு இந்தியா முழுமையாக தலையிட வேண்டும் என இந்திய பிரதமரிடம் வேண்டுகின்றோம் - என்றார்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# கொழும்பில் கோர விபத்து! 2 தமிழ் இளைஞர்கள் சாவு!!

கொழும்பில் இடம்பெற்ற கோர விபத்தில் தமிழ் இளைஞர்கள் இருவர் சாவடைந்துள்ளனர்.

கொழும்பு - கொலன்னாவை பிரதான வீதியில் நேற்றிரவு7.30மணியளவில் இடம்பெற்ற விபத்தில் உறவினர்கள் இருவரே உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் ஒன்றும் பாரவூர்தி ஒன்றும் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளனர்.

வத்தளையைச் சேர்ந்த 26 வயதுடைய அன்ரனி மரியநாயகம், அவரதுமைத்துனரான 22 வயதுடைய தேவதாஸ் கனிஸ்ரன் ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

பாரவூர்தியின்சாரதியைக் கைதுசெய்துள்ளபொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (02)



காலைக்கதிர்
Kalaikkathir

# விடைபெற்றார் இந்திய தூதரக பிரதி ஆணையர்

கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் பிரதி உயர் ஆணையராகக் கடமையாற்றி தனது பதவிக் காலத்தை நிறைவு செய்து நாடு திரும்பவுள்ள, விேனாத் குரியன் ஜேக்கப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோனை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பு கொழும்பில் உள்ள பாதுகாப்பு இராஜாங்க அமைச்சில் செவ்வாய்கிழமை இடம்பெற்றுள்ளது. பாதுகாப்பு இராஜாங்க அமைச்சுக்கு வருகை தந்த இந்திய பிரதி உயர்ஸ்தானிகரை இராஜாங்க அமைச்சர் வரவேற்றதுடன், பின்னர் முக்கிய விடயங்கள் குறித்து சிநேகபூர்வமாகக் கலந்துரையாடினார்.

இலங்கையில்தான் கடமையாற்றிய காலத்தில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு வழங்கிய ஒத்துழைப்புக்காக ஜேக்கப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருக்கு தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

இந்தியபிரதிஉயர்ஸ்தானிகரின்சேவையைப் பாராட்டிய இராஜாங்க அமைச்சர் தென்னகோன், அவரது பதவிக் காலத்தில் இலங்கைக்கு இந்தியா வழங்கிய உதவிகளுக்கு தனது நன்றியையும் தெரிவித்தார்.

மேலும், இந்த சந்திப்பை நினைவு கூறும் வகையில் இராஜாங்க அமைச்சர் தென்னகோன் இந்திய பிரதி உயர்ஸ்தானிகருக்கு நினைவுச்சின்னம் ஒன்றையும் வழங்கினார்.

இந்தச் சந்திப்பின் போது இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் உதவி பாதுகாப்பு ஆலோசகர் லெப்டினன்ட் கேர்ணல் புனீத் சுஷிலும் கலந்துகொண்டார். (05)



# உயிர்த்தெழும் பூமி வேளாண்மை இரு நாள் விவசாயப் பயிற்சிகள்

உயிர்த்தெழும் பூமி வேளாண்மை என்னும் தொனிப் பொருளில் யாழ். மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் திருநெல்வேலியில் புதன் மற்றும் வியாழன் ஆகிய இரு தினங்கள் இடம்பெற்றது.

வடமாகாண பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அஞ்சனா தேவி ஸ்ரீரங்கன் தலைமையில் ஆளவாழ்தல் அறக்கட்டளை நிறுவனத்தின் அனுசரணையுடன் இந்த இருநாள் தொழில்நுட்ப பயிற்சிப்பட்டறை நடைபெற்றது.

இந்தத் தொழில்நுட்பப் பயிற்சிப்பட்டறைக்குவளவாளராக இந்திய விவசாய ஆர்வலரும், 60 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு நேரடியாக விவசாயம் தொடர்பான களப் பயணங்களை மேற்கொண்டவருமான பல சர்வதேச பல்கலைகழகங்களில் சூழல்நேயமான நிலைபேறான விவசாய செயற்பாடுகள் தொடர்பான கருத்தரங்குகளை மேற்கொண்டுவருபவருமான திருமதி மாரிமுத்து ரேவதி அம்மையார் கலந்துகொண்டு செயன்முறையுடன் கூடிய பயிற்சியை நடத்தினார்..

நிகழ்வில் பிரதம விருந்தினராக மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி சுகந்தினி செந்தில்குமரன் கலந்து கொண்டார்..

இந்தப்பயிற்சிப்பட்டறையில் மண்ணைப் புதுப்பித்தல், நீர் முகாமைத்துவம், வினைத்திறனான சக்திப்பயன்பாடு, பயிர் முகாமைத்துவம், அறுவடையும் அறுவடைக்குப்பின்னரான தொழில்நுட்பங்கள், சந்தை முகாமைத்துவம் என பல கோணங்களில் புத்துயிர்ப்பூட்டும் விவசாயக் கருத்துக்களை விவசாய ஆர்வலர்களுக்கு வழங்கப்பட்டது. (05)

# தப்பிச் சென்ற கைதி கம்பஹாவில் கைது

பல்லேகல திறந்தவெளி சிறைச்சாலையில் இருந்து தப்பிச் சென்ற கைதி ஒருவரை பொலிஸார் கம்பஹாவில் கைது செய்துள்ளனர் எனச் சிறைச்சாலை திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குறித்த நபரின் நடத்தையில் காணப்பட்ட சந்தேகத்தின் பேரில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும், குறித்த கைதி, பல கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டார் எனப் பதிவு செய்யப்பட்ட குற்றவாளி எனவும் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (05)



# இந்திய மருந்துகள் தரக் குறைவென முத்திரை குத்த முயற்சிக்காதீர்கள்

## அமைச்சர் பந்துல வலியுறுத்து

இலங்கைக்குமாத்திரமின்றி, உலகின் பல நாடுகளுக்கும் இந்தியா மருந்துகளை விநியோகிக்கிறது. குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக தெரிவிக்கப்படும்கருத்துக்களால் இந்தியாவின் மருந்துகள் தரக்குறைவானவைஎன்றமுத்திரையை குத்திவிட முடியாது. அதற்கான முயற்சிகளையும் முன்னெடுக்க வேண்டாம் என அமைச்சரவைபேச்சாளர்பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களைஅறிவிக்கும்வாராந்த ஊடகவியலாளர் மாநாடு இடம்பெற்ற போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

தற்போது ஏதேனுமொரு விடயத்தை மையமாக வைத்து, அதனால் எதிர்வரும் மாதங்களில் பாரிய அபாயம் ஏற்படப் போவதாக மக்களை பீதியடைய செய்யும் பிரசாரங்கள்முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால்அவ்வாறு எந்த அபாயமும் தற்போது ஏற்படவில்லை. கடந்த காலங்களில் தேசிய கடன் மறுசீரமைப்புக்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதும் , ஊழியர் சேமலாப நிதியத்துக்கு பாரிய ஆபத்து ஏற்படவுள்ளதாக மக்களை பயமுறுத்தினர். ஆனால் இன்று அவ்வாறு ஏதுவுமே இடம் பெறவில்லை. எனவே, சமூகத்தில் அரசாங்கத்துக்கு எதிராக இவ்வாறு திட்டமிட்ட போலிப்பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்பது தெளிவாகிறது. அதற்கமையவே மருந்துகள் குறித்தும் மக்கள் மத்தியில்அச்சத்தைஏற்படுத்தும் வகையிலான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்தியா,இலங்கைக்குமாத்திரமின்றி பலநாடுகளுக்கும்மருந்துகளை விநியோகித்து வருகிறது. எனவேஒருசிலர்தமது குறுகிய நோக் கங்களுக்காக இந்திய மருந்துகள்தரக்குறைவானவை என்ற முத்திரையை குத்த முயற்சிக்கின்றனர். இவ்வாறான கருத்துக்கள்இராஜதந்திரரீதியில் தாக்கத்தைஏற்படுத்தும்என்பதால் அவற்றைத்தவிர்த்துக்கொள்ளுமாறு வலியுறுத்துகின்றோம். - என்றார். (05)

# 5 நட்சத்திர சொகுசு விடுதியில் யுவதிக்கு பாலியல் துன்புறுத்தல்

## கொழும்பில் கோடீஸ்வர வர்த்தகர் கைது

கொழும்பில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் யுவதியை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் எனக்கூறப்படும் கோடீஸ்வர வர்த்தகர் ஒருவர் பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகதடுப்புப்பிரிவின் பொலிஸ் குழுவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாலியல் துஷ்பிரயோ மாணவர் விசாவில் இளைஞர்களை மேலதிக கல்விக்காக ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்புவதாகக்கூறப்படும் நிறுவனத்தை கொழும்பில் நடத்திவந்த கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளானதாக கூறப்படும் யுவதி அவரின் நிறுவனத்தில் பணிபுரிபவர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொழும்பில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் குறித்த நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த விசேட கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு சந்தேகநபரான கோடீஸ்வர வர்த்தகர் இந்த யுவதிக்கும் அழைப்பு விடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கோடீஸ்வர தொழிலதிபரின் அழைப்பின் பேரில் குறித்த யுவதியும் அதே ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்கு சென்றுள்ளார்.

சந்தேகநபர்ஹோட்டலில் சந்திப்பு மண்டபத்தை முன்பதிவு செய்திருந்தார் எனவும், அந்த யுவதி மண்டபத்துக்குச்சென்றபோது கதவு மூடப்பட்டு பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார் எனவும்பொலிஸ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (05)



# களனிப் பாலத்தில் ஆணிகளை அகற்ற விசேட பொறியியலாளர் வரவேண்டும்

## 5.9 மில்லியன் ரூபா பெறுமதியான பொருள்கள் மாயம் என்கிறார் பந்துல

களனி கல்யாணி நுழைவாயில் பாலத்தில் ஆணிகளை எவரும் திருடவில்லை. ஆணிகளை அகற்ற விசேட பொறியியலாளர்கள் வருகை தர வேண்டும். நீர் குழாய்,பலவர்ணமின்குமிழ்கள் உட்பட 5.9 மில்லியன்ரூபாபெறுமதியான பொருள்களே மாயமாகியுள்ளன.

நெடுஞ்சாலைகள், பாலங்கள், ரயில் பாதைகள் ஆகியவற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசிய பாதுகாப்பு சபை கூட்டத்தில் உரிய தரப்பினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்என போக்குவரத்து,ஊடகத்துறைமற்றும் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வின்போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும்உரையாற்றியவை வருமாறு - நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர களனி பாலத்தில் பொருத்தப்பட்டிருந்த 28 கோடி ரூபா பெறுமதியான ஆணிகளை போதைப்பொருள் பாவனையாளர்கள் திருடியுள்ளதாக குறிப்பிட்ட விடயம் பொய்யானது.

களனி கல்யாணி நுழைவாயில்பாலத்தைக் காட்டிலும் கொழும்பு கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில்தான் திருட்டு சம்பவங்கள் தீவிரமடைந்துள்ளன.

கொழும்பு - கட்டுநாயக்க வரையிலான அதிவேக நெடுஞ்சாலையில் இரு மருங்கிலும் அமைக்கப்பட்டுள்ள இரும்பு வேலிகள், பாதுகாப்பு இருப்பு கம்பிகள், மின் கம்பிகள், மின் விளக்குகள், ஒளி மற்றும் ஒலி எழுப்பு கருவிகள், நீர் வெளியேறும் பெறுமதியான குழாய்கள், உட்பட பல்வேறு பொருள்கள் இவ்வாறு திருடப்பட்டுள்ளன. இவற்றின் மொத்த பெறுமதி 294.6 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

களனி கல்யாணி நுழைவாயில் பாலத்தில் 28 கோடி ரூபா பெறுமதியான ஆணிகள் போதைப்பொருள் பாவனையாளர்களால் திருடப்பட்டன என வெளியான செய்தி அடிப்படையற்றதாகும்.

களனி பாலத்தில் இரு மருங்கிலும் பொருத்தப்பட்டிந்த பெறுமதியான செம்பு கம்பிகள், பெறுமதியான நீர் குழாய்கள், பல வர்ண மின்குமிழ்கள் உள்ளிட்ட பொருள்களே மாயமாகியுள்ளன. இவற்றின் பெறுமதி 5.9 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே களனி பாலத்தில் ஆணிகள் காணாமல் போகவில்லை.ஆணிகளைக் கழற்ற விசேட பொறியியலாளர்கள் வருகை தர வேண்டும். அதிவேக நெடுஞ்சாலைகள், பாலங்கள், ரயில் பாதைகள் ஆகியவற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசிய பாதுகாப்பு சபை கூட்டத்தின் போது உரிய தரப்பினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். பொது சொத்துக்களைப் பாதுகாப்பதுதொடர்பில் பொலிஸ்மாஅதிபருடன் பேச்சில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம். - என்றார். (05)

# தனது சொந்த காருக்கு அரச பணத்தில் எரிபொருள் நிரப்பிய பொலிஸ் அதிகாரி வெளிநாட்டுக்கு ஓட்டம்

குற்றப் புலனாய்வுப் பிரிவில் கடமை புரிந்த காலத்தில் தனது தனிப்பட்ட காருக்கு எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக அரசாங்கப் பணமான 2 லட்சத்து 43 ஆயிரத்து 600 ரூபாவை முறைகேடாக பயன்படுத்தியதாகக்கூறப்படும் பொலிஸ் அத்தியட்சகரிடம் விசாரணைநடத்தியஉதவிப் பொலிஸ்அத்தியட்சகர்நுவன் பிரசாத் தண்டநாராயணா அச்சுறுத்தப்பட்டு ஆபாசமாக பேசப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகரால் கோட்டை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அச்சுறுத்தல் விடுத்த பொலிஸ் அத்தியட்சகர் கடமைக்கு சமுகமளிக்காத காரணத்தால் சேவையை விட்டுவிலகியதாககருதப்பட்டு அவருக்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாகசிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்நிலையில், பொலிஸ் அத்தியட்சகர்வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றுள்ளார் எனத் தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் அந்த அதிகாரி கூறியுள்ளார். (05)

# ஒருநாள் அடையாள அட்டை சேவை வடக்குக்கு வவுனியாவில் வேண்டும்

## சார்ள்ஸ் எம்.பி. கோரிக்கை

ஒருநாள் சேவை ஊடாக தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்வதற்கு கொழும்புக்கு வருகை தரும் வடக்கு மாகாண மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கிறார்கள். ஆகவே, சிரமங்களுக்குத் தீர்வாக வவுனியாவில் ஒருநாள் சேவை ஊடாக தேசிய அடையாள அட்டைவிநியோகிக்கும் பிரிவு ஒன்றை பொது மக் கள் பாதுகாப்பு மைச்சர் ஆரம்பிப்பாரா என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் பொதுமக்கள்பாதுகாப்பு அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.



நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு வேளைக்கான கேள்வி நேரத்தின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

ஒரு நாள் சேவை ஊடாக தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்வதற்கு வடக்கு மாகாணத்தில் இருந்து 25 சதவீத மானோர் ஆட்பதிவு திணைக்களத்துக்கு வருகை தருகிறார்கள். பல சிரமங்களுக்கு மத்தியில் கொழும்புக்கு வந்து, அதிக பணத்தைச் செலவழித்து இவர்கள் ஒருநாள் சேவையை பெற்றுக்கொள்கிறார்கள்.

மக்கள் எதிர்க்கொள்ளும் சிரமங்களை நிவர்த்தி செய்ய வடக்கு மாகாணத்தில் வவுனியாமாவட்டத்தில் ஆட்பதிவு திணைக்களத்தின் ஒருநாள் சேவை வழங்கல் மையத்தை அமைக்க முடியும்.

இதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களை போல் அநுராதபுரம், பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் உள்ளவர்களும் பயனடைவார்கள்.

ஒருநாள் சேவை ஊடாக தேசிய அடையாள அட்டைப் பெற்றுக்கொள்ள கொழும்புக்கு வரும் வடக்கு மாகாண மக்கள் எதிர்க்கொள்ளும் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு வடக்கு மாகாணத்தில் வவுனியா மாவட்டத்தில் தேசிய அடையாள அட்டை ஒருநாள் சேவை விநியோக பிரிவை பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு ஆரம்பிக்குமா? -என்றார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கடிதங்களால் எதுவும் மாறப்போவதில்லை

தமிழர்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றை வழங்க இலங்கை அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று தமிழ்த் தேசியம் பேசும் அரசியல் கட்சிகள் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடிக்குக் கடிதம் எழுதினார்கள். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் அரசுக் கட்சி என்பன தனித் தனியாகக் கடிதங்களை எழுதின. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் தமிழ் மக்கள் கூட்டணி ஆகியன இணைந்து தனியாக ஒரு கடிதம் எழுதின. ஜனநாயகக் கூட்டணியில் இடம்பெற்றிருக்கும் தமிழ்த் தேசியக்கட்சியின் செயலாளரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தனியாக ஒரு கடிதம் அனுப்பினர். இவற்றுக்குப் புறம்பாக யாழ்ப்பாணப் பொது (சிவில்) அமைப்பு என்கிற பெயரிலும் நால்வர் தனியாக ஒரு கடிதம் அனுப்பினார்கள்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும், ஒற்றையாட்சியை நீக்கி சமஷ்டியை ஏற்படுத்தவேண்டும், வடக்குகிழக்குதமிழர்களுடன் ஆட்சி அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ளவேண்டும், சுயாட்சிக்கான மக்கள் வாக்கெடுப்பு நடத்தவேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்தக் கடிதங்கள் மோடிக்கு அனுப்பப்பட்டுள்ளன. அவற்றின் அர்த்தம் இலங்கையில் தமிழர்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்று ஏற்படுவதற்கு இந்தியாவின் தலையீட்டை – நேரடியான உள்நுழைவை – வலியுறுத்திப் பெறுவதுதான். இந்தியா ஒரு பெரியண்ணனாக இருந்த இலங்கையை தட்டி, மிரட்டி தமிழர்களுக்காகக் காரியத்தைச் சாதித்துத் தரவேண்டும் என்பதுதான்.

தமிழ்க்கட்சிகளின்இந்தஅழுத்தங்கள்,கோரிக்கைகளைச் சமாளிக்கும் நோக்கத்தோடு, பொலிஸ் அதிகாரம் அற்ற 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்த தான் தயாராக இருக்கிறார் என்பதற்கான நிகழ்ச்சி நிரலோடு அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் இந்தியாவுக்குச் சென்றுள்ளார். தனது இரண்டு நாள் பயணத்திற்காக அவர் நேற்று இந்தியாவைச் சென்றடைந்தார். உடனேயே அயலுறவுத்துறை அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இன்று அவர் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். இந்தப் பேச்சில் ஈழத் தமிழர்களின் அரசியல் தீர்வு தொடர்பில் மோடி பேசுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்படிப்பட்ட நிலையில், தமிழ்க் கட்சிகள் கேட்டாலென்ன கேட்காட்டில் என்ன, இந்தியா அழுத்தம் கொடுத்தால் என்ன கொடுக்காவிட்டால் என்ன இலங்கை அதற்குப் பதிலளிக்கும் வகையில் எப்படி நடந்துகொள்ளும் என்பதை இலங்கையின் அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன நேற்றுத் தெளிவாக எடுத்துக்கூறிவிட்டார்.

'இலங்கை இறைமையுள்ள நாடு. எமக்கென்று ஒரு ஜனாதிபதி உள்ளார். அரசு உண்டு. பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதி தலைமையிலான நாடாளுமன்றமே முடிவு செய்யும்'' என்று கூறியிருக்கிறார் அமைச்சர் பந்துல. அதாவது மோடி சொன்னால் என்ன யார் சொன்னால் என்ன நாடாளுமன்றத்தில் எண்ணிக்கைப் பெரும்பான்மையை வைத்திருக்கும் சிங்கள, பௌத்த பேரினவாதம் சொல்வதுதான் தீர்வு, அதுதான் சட்டம் என்று சொல்கிறார் அவர்.


போதாக்குறைக்கு தாங்கள் விரும்பும் தீர்வை குறுக்கு வழியில்தட்டிப்பறிக்கசம்பந்தன்தலைமையிலானகுழுவினர் முயற்சிக்கின்றார்கள் என்றுவேறு குற்றஞ்சாட்டியிருக்கிறார். ஆகமொத்தத்தில் யார் என்ன சொன்னாலும் எதைச் செய்தாலும் இலங்கையின் இறைமையைத் தாண்டி உள்ளே நுழையும் துணிபு அவர்களில் எவருக்கும் இல்லை என்பதால், தாங்கள் நினைத்ததைத்தான் செய்வோம், அதில் தமிழர்களுக்குத் தீர்வு என்று ஒன்று இல்லை என்பதே அமைச்சர் பந்துலவின் கருத்தின் பின்னாலுள்ள விளக்கம்.

இந்தியத் தலைமை அமைச்சர் மோடியை அரசுத் தலைவர் ரணில் சந்திப்பதற்கு முன்பே துணிச்சலாக இந்தக் கருத்தை முன்வைத்துவிட்டார் அமைச்சர் பந்துல.

இதற்குப் பின்னரும் இந்தியாவின் அழுத்தத்துக்குப் பணிந்து ரணில் தமிழ் மக்களுக்குத் தீர்வை முன்வைப்பார் என்று எதிர்பார்ப்பதில் ஏதும் பயனுண்டா? விழுந்து விழுந்து கடிதம் எழுதியதில்தானும் ஏதும் பயனுண்டா?

# இது வேற ரணில்

**என். சத்திய மூர்த்தி**



தற்போது இந்தியப் பயணத்தில் இருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கே, இரண்டு நாட்களுக்கு முன், தலைநகர் கொழும்பில் அனைத்து தமிழ் கட்சி தலைவர்களுடன் கலந்துரையாடி உள்ளார். வழக்கம் போலவே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மிஸ்ஸிங்.

ஜனாதிபதியின் இந்தியப் பயணத்தை ஒட்டி. இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு பல்வேறு தமிழ் தரப்பினரும் கடிதம் எழுதியிருந்தார்கள். அதில் பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும். இப்போது பதின்மூன்று, பின்னர் சமஷ்டி, எப்போதுமே சமஷ்டி என்பன போன்ற வெவ்வேறு கோரிக்கைகள் இடம்பெற்றிருந்தன.

இந்தக் கடிதங்களை எழுதிய கட்சிகள் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிப்பவை. அவற்றின் நடாளுமன்ற உறுப்பினர்களுக்கேஜனாதிபதியுடனான பேச்சில் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால், தற்போது நாடாளுமன்ற உறுப்பினர் அல்லாத சிவாஜிலிங்கமும் மோடிக்கு ஒரு கடிதம் அனுப்பிஇருந்தார். அதில் மட்டுமே, சுயாட்சிக்கான பொதுஜன வாக்கெடுப்பிற்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தனது தீர்வுத் திட்டத்தை ரணில் விளக்குவதற்காகத்தான், இந்தக் கூட்டம் கூட்டப்பட்டிருந்தது. அவர்களது கருத்தை ஜனாதிபதி உள்வாங்கிக் கொள்வதற்காக அல்ல. அதனை அவர்களும் புரிந்துகொண்டார்கள். அல்லது, ரணில் அவர்களுக்கு அதனை புரிய வைத்தார்.

கூட்டத்தில் தான் கூறிய கருத்துக்களை ஒட்டியே, ரணில் இந்திய பிரதமருடன் இனப்பிரச்சினை குறித்து விடயங்களில் அரசின் நிலைபாட்டை தெளிவுபடுத்துவார் என்றே எதிர்பார்க்கலாம். அது குறித்த இந்தியாவின் கருத்துக்களை செவிமடுப்பார். ஆனால், செயல்படுத்துவார் என்று கூறிவிடமுடியாது. இதுதான், அடுத்தடுத்த அரசுகளிடம் இந்தியாவின் அனுபவமும்கூட.

### கழுவிய மீனில்...

தமிழ் தலைவர்களில் சிலர். ஜனாதிபதி தங்களிடம் முன்வைத்த விடையங்களுக்கான பதில் கருத்துக்களை, அவர் புதுடெல்லி சென்றடைவதற்கு முன்னர், இந்திய அரசு தலைமையிடம் சேர்த்திருக்கலாம். அதற்காக அவற்றை இந்தியா ஏற்றுக்கொண்டு, அவற்றின் படியே மோடி, ரணிலுடன் கதைப்பார் என்று யாரும் எதிர்பார்க்கமுடியாது.

ஜனாதிபதியின் கூட்டத்தில் தாங்கள் பிரதமர் மோடிக்கு அனுப்பிய கடிதத்தின் கருத்துக்களை யாராவது தமிழ் தலைவர்கள் முன்வைத்தார்களா, என்பதும் தெரியவில்லை. அல்லது, எப்போது நரேந்திர மோடியிடம் அந்த பொறுப்பை அளித்துவிட்டோமோ, அதனையேதாங்களும்ஜனாதிபதியுடன் பேசுவது அதிகப்பிரசங்கிதனம் என்று அவர்கள் கருதினார்களோ, என்னவோ.

இதன் காரணமாகக்கூட, இந்தியப் பிரதமர், கடித விவகாரங்கள் குறித்து ரணிலுடன் பேசுவாரேயானால், தான் தமிழ் தலைவர்களைச் சந்தித்த போது, அது குறித்து அவர்கள் எந்தக் கோரிக்கையையும் முன்வைக்கவில்லை என்று கூறி, அவர் நழுவலாம். இலங்கை அரசியலில், ரணில், கழுவிய மீனில் நழுவிய மீன் என்பது தமிழ் தலைவர்கள் அறியாதது அல்ல.

### முதல் கோணல்

ரணில் கூட்டிய சந்திப்பின் முக்கியத்துவம்? அவர் கூறியதில் (மட்டும்) இல்லை. கூறாது விட்டதிலும் இல்லை. மாறாக, முந்தைய காலகட்டங்களைப் போல். அவர் சம்மந்தனோடும் சுமந்திரனோடும் நிறுத்திவிடவில்லை. ஏன், 'தமிழ் தேசியம்' பேசும் கட்சிகளோடும் நிறுத்திவிடவில்லை.

ரணில் கூட்டிய கூட்டத்தில், டக்ளஸ் தேவானந்தாவும் பிற தமிழ் அமைச்சர்களும் கலந்து கொண்டார்கள். அது வழமையான விடயம்தான். ஆனால், இந்தமுறை, அவர்களோடு, சுதந்திர கட்சியின் அங்கஜன் ராமநாதனும், கிழக்கில் இருந்து 'பிள்ளையான்' சந்திர காந்தானும் கலந்து கொண்டார்கள்.

இவர்களில், பிள்ளையானை, 'தமிழ் தேசியம்' பேசும் பிற தலைவர்கள் தங்களில் ஒருவராக ஏற்றுக்கொள்வதில்லை. என்றாலும், அவரும் தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி என்று அரசு கருதுகிறது. இதுவே சுதந்திர கட்சியின் அங்கஜனுக்கும் பொருந்தும்.

பிள்ளையானை போல் இல்லாமல், அங்கஜன் ஒரு தேசிய கட்சியின் பிரதிநிதி. சிங்கள கட்சியின் சின்னத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அதிலும் குறிப்பாக, சுதந்திர கட்சியின் சின்னத்தில் தேர்ந்தெடுகக்கப்பட்ட ஒரே உறுப்பினர். கட்சித் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனா உள்ளிட்ட பிற உறுப்பினர்கள், ஆளும் மொட்டு கட்சியின் சின்னத்திலேயே தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்தப் பின்னணியில், 'தமிழ் தேசியம்' என்று தங்களது மார்பைத் தட்டிக்கொள்ளும் தலைவர்களோடு, பிள்ளையானையும் அங்கஜனையும் ஜனாதிபதி அழைத்து பேசியது குறிப்பிடத்தக்க விடயம். அதிலும் குறிப்பாக, இனப்போர் முடிவுற்ற காலகட்டத்தில், அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனைத்து கட்சியினருடனும் பேசினாலே செயல்படுத்தக்கூடிய தீர்வு கிடைக்கும் என்று சொன்னபோது, மேலும் கீழும் குதித்த சம்மந்தன் வகையாறாவிற்கு இது சம்மட்டி அடி.

### பொருள் பொதிந்த வசனம்

இன்னும் சொல்லப்போனால், பேச்சின் இடையே, சம்மந்தன் அரசுடனான தங்களது அங்கலாய்ப்பை வெளிப்படுத்திய போது, ரணில், சற்று காட்டமாகவே பதில் கூறினார் என்று செய்திகள் தெரிவித்தன. பேச்சில் கலந்துகொள்ள விருப்பம் இல்லாதவர்கள் வெளியேறலாம் என்று சாரப்படும்படி அவர் பேசினார் என்று பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

ரணில் அத்துடன் நிற்கவில்லை. பதிமூன்று-பிளஸ் தீர்வை மஹிந்த ராஜபக்ஷஜனாதிபதியாக இருக்கும்போது ஏற்றுக்கொண்டார் என்று சுமந்திரன் சுட்டிக்காட்டினார். தற்போது, ரணில் பதிமூன்று-மைனஸ் என்று பொலிஸ் அதிகாரத்தையம் தரப்போவதில்லை என்று கூறியதை அவர் குறைகூறினார்.

இதற்குரணிலின்பதிலுக்கு, அரசியல் ரீதியாக பல அர்த்தங்கள் உள்ளன. 'நான் ரணில் விக்கிரமசிங்கே. ரணில் ராஜபக்ச அல்ல' என்று அவர் கூறியது, பழைய கதையை இங்கே பேசாதீர்கள் என்று பொருள் கொள்ளலாம். அதற்கு மேலாக, 'ராஜபக்ஷாக்கள் போல் நான், அப்பாவி கிராமத்தான் அல்ல. நான், அரசியல் பாடம் அனைத்தும் கற்ற ஒரு குடும்பத்திலிருந்து வந்தவன்' என்றும் பொருள் கொள்ளலாம்.

அதாவது, 'இனப்போர் முடிந்த காலகட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த முன்வைத்த பதிமூன்று-பிளஸ் முடிவுகளை உதாசீனபடுத்திய நீங்கள் இப்போது என்னிடம் அது குறித்து பேசுவதற்கு அருகதை அற்றவர்கள்' என்று ரணில் உள்ளர்த்தம் வைத்து பேசியதாகவும் எடுத்துக்கொள்ளலாம். வேண்டுமென்றால், 'மஹிந்த செய்யாததை சொன்னார், நான் செய்யமுடிவதை மட்டுமே சொல்வேன்' என்றுகூட ரணிலின் பொருள் பொதிந்த அந்த வசனத்திற்கு பொருள் கொள்ளலாம். தான், இனப்பிரச்சினையில் அரசியல் செய்யவிரும்பவில்லை என்று அவர் கூறியதும் குறிப்பிடத்தக்கது.

### அறிவீலித்தனம்

இவை அனைத்திற்கும் பின்னால் பொதிந்திருக்கும் உண்மை வேறு மாதிரி. அந்த வகையில், தான் அளிக்கும் அரசியல் தீர்வின் பல அலகுகளுக்கும் நாடாளுமன்றத்தின் அனுமதிவேண்டும் என்று ரணில் கூறியுள்ளார்.

இது குறித்து பேச்சில் யாரும் அவரிடம் விளக்கம் கேட்டதாக தெரியவில்லை. பின்னர், சம்மந்தன் பதிமூன்றை செயல்படுத்த, நாடாளுமன்றத்தின் அனுமதி தேவையில்லை என்று விளக்கம் அளித்துள்ளார். அதுவே உண்மை நிலையும்கூட.

ஆனால், பதிமூன்று செயல்படுத்தப்படுவதை எதிர்த்து, சிங்கள பேரினவாதிகள் நாடாளுமன்றத்தில் தனி நபர் மசாதோவோ, சட்ட முன்வடிவோ தாக்கல் செய்தால், குறிப்பாக, சிங்கள கட்சிகளும் உறுப்பினர்களும் எவ்வாறு வாக்களிப்பார்கள், என்ற கேள்வி எழுகிறது. அந்த வகையில்தான், ஜனாதிபதி பொலிஸ் அதிகாரம் குறித்து கருத்து தெரிவித்தாரா, என்பதும் தெரியவில்லை. அல்லது, மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் கொடுப்பதை சிங்கள கட்சிகள் எதுவுமே இன்றும் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை என்று அவர் கூறினாரா?

### முற்றிலும் முழுக்கு

எது எப்படியோ, இன்றுவரை, அரசுடன் மட்டுமே முட்டிமோதும் தமிழர் தரப்புகள், என்றுமே தங்களது சிங்கள பங்காளிக் கட்சிகளுடன் பேச்சு நடத்தியதே இல்லை என்பதே உண்மை. அது, அவர்களது அறிவீலித்தனத்தையே காட்டுகிறது.

தற்போது, ஜனாதிபதியின் இந்தியப் பயணத்தை ஒட்டி, அவர் தமிழர்களை ஏமாற்றுகிறார் என்று சஜித் பிரேமதாஸாவின் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஜேவிபி ஆகியவை கருத்துத் தெரிவித்துள்ளன. அவ்வாறானால், சம்மந்தனோ, சுமந்திரனோ அல்லது வேறு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் யாராவதோ முன்வைக்கும் செயல்திட்டத்திற்கு ஆதரவாக அவர்கள் வாக்களிப்பார்களா?

இதனை, தமிழ் தலைமைகள் அவர்களிடம் கேட்டு தெரிந்து கொள்ளவேண்டும். அதை விடுத்து, அரசைமட்டும் முன்னிலைபடுத்தி, தமிழர் தலைமைகள் செய்யும் அரசியலுக்கு முற்றிலுமாக முழுக்கு போடவேண்டும்.

### சர்வதேசத்திற்கு சவால்

அதே சமயம், தமிழர் தரப்புகள் இனியாவது நிஜ உலகிற்கு திரும்பி வரவேண்டும். நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளை கடந்த ஓராண்டு காலமாக ரணில் கையாண்டு வருவதற்கு தென்னிலங்கையில் அவருக்கு ஆதரவு பெருகிவருவதாகக் கருத இடமிருக்கிறது. அதற்காக, அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் அவர் வெற்றிபெறுவார் என்றோ, தமிழ் தலைமைகள் அவரை கண்மூடிதனமாக ஆதரிக்கவேண்டும் என்பதோ அல்ல பொருள்.

ஒரு பக்கத்தில், பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்தாலும், தறிகட்டு ஓடின அன்றாட பொருள்களின் விலைவாசி, கொஞ்சம்கொஞ்சமாகவேனும் குறைந்து வருவதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசு விலைநிர்ணயிக்கும் பெட்ரோலிய பொருட்கள் மற்றும் மின்சாரம் ஆகிய-வற்றிற்கும் கட்டணங்கள் குறைந்துள்ளன. அதேசமயம், உள்ளக கடன் மறுசீரமைப்பு திட்டம் போன்ற சில காரணங்களினால், அவருக்கு தொடர்ந்து தொழிலாளர் யூனியன்களின் எதிர்ப்பு இருக்கிறது. இன்று, ரணிலை மிஞ்ச ஆளில்லை. அதை போலே, அவருக்கு நெருக்கடி கொடுத்து பதவியில் இருந்து விலக வைக்கவும், அவருடைய இடத்திற்கு வருவதற்கும் ஆள் இல்லை. இதனை அவரது தலைமைக்கு நாடாளுமன்றத்தில் முட்டுகொடுக்கும் மஹிந்தா உணர்ந்துள்ளார். அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச சமூகமும் உணரத் தொடங்கி உள்ளது.

அதாவது, 'இனப்பிரச்சினை மற்றும் போர்க் குற்றங்களா, அல்லது எனது தலைமையா?' என்று ரணில் சர்வதேசத்திற்கு சவால் விட்டால், அதனை எதிர்கொள்ள அமெரிக்கா ஒத்த நாடுகள் தயாராக இல்லை என்பதே உண்மை. இந்த உண்மையை உணர்ந்து கொண்டுதான், ரணில் இந்திய தலைநகருக்கு வருகை தந்துள்ளார்.


அந்த வகையில், நாடாளுமன்றத் தேர்தலில் தனது சொந்த இடத்தைக்கூடத் தக்கவைத்துக்கொள்ள முடியாத ரணில் விக்கிரமசிங்கே அல்ல இப்போது இருப்பது. இது வேற ரணில். அதனை தமிழர் தரப்பும் உணர்ந்து செயல்படவேண்டும். இல்லையென்றால், வழக்கம் போல, பிரச்சினையை ஆறப்போட்டு, 'வீக்'-கான அடுத்த ஜனாதிபதிக்காக காத்திருக்கலாம்!


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad
Cream Caramel
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml
Milk Drink
Cocacola M
Pepsi M
Coca Cola Tin

காலைக்கதிர் Kalaikkathir





# திருக்குறளில் கல்வி



மனிதனாகிய எம்மைப் பிற ஜீவராசிகளிடமிருந்து பிரித்து வேறுபடுத்தி 'மனிதன்' எனும் தனித்துவம் மிக்க உயர்வான மகுடத்தின் பாரத்தை நம் சிரசு தாங்கி வருவதற்கான காரணம் நம்மிடம் காணப்படும் தனித்துவமே. என்ன தனித்துவம் அது? அது தான் அறிவு.அறிஞர்கள் அதனை மேலும் மெருகூட்டி ஆறாம் அறிவு பகுத்தறிவு என்று நாமம் சூட்டியுள்ளனர்.அறிவு வளர யாது செய்ய வேண்டும்? அறிவு சார் அற நூல்களின் துணையைநாட வேண்டும்,நாடிநொடிக்குநொடி அனுபவித்து அறிய வேண்டும்.

மேற்கூறியவாறு மனிதனை மனிதப் பண்போடு மனிதனாக வாழவைக்கும் அறக் கருத்துக்கள் நம் ஆன்றோர்களாகிய கல்விமான்கள் பலராலும் வெண்பாக்கள் வடிவிலும்,சுவடிகளிலும் பொறித்துவைக்கப்பட்டுள்ளன.நல்வழி,-மூதுரை,ஆத்திசூடி போன்ற தமிழ் ஞான மூதாட்டியாம் ஔவையாரின் படைப்புக்களும் வான் புகழ் வாய்த்த வள்ளலாம் வள்ளுவனின் திருக்குறளும், மேலும் நாலடியார் போன்றனவும் அத்தகைய கருத்துக்களை தன் கண் கட்டிக் காக்கும் பொக்கிசங்களாகும்.



இவ்வாறான பனுவற் தொகுதியினுள் இன,மத, மொழி எனும் பேதங்கள் எதுவுமின்றி உலகில் வாழும்அனைத்து ரக மனிதர்களாலும்பயன்பெறக்கூடியவண்ணம் அமையப்பெற்றபடைப்பேவள்ளுவனின் திருக்குறள். ஒன்றல்ல,இரண்டல்ல மொத்தம் 1330 குறட்பாக்கள்.இன்றைய பாடல்களைப் போல் மொழி பல சேர்ந்து அர்த்தமற்ற சொற்பிரயோகம் இல்லை.தூய்மையான தமிழ் மொழியில் வகுக்கப்பட்ட ஓவியம்.பொய்யாமொழிப் புலவரின் கரத்தின் கண் தவழ்ந்து விளையாடிய எழுதுகருவி ஓலைச் சுவடியில் ஆடிய ஆட்டம்,நளின ஆட்டம்.

ஈரடிக் குறட்கள் ஆனால் ஆறடி மனிதனுக்கு அறிவு புகட்டும் கருத்துக்கள்.அன்றும் இன்றும் என்றும் என முக்காலத்திற்கும் பொருந்தம் அற்புதமான நன்னெறித் தத்துவங்கள். இம் முப்பாலின் கண் இத்தகைய கீர்த்தி கொங்கும். இந் நன்னூலில் 'கல்வி' எனும் தலைப்பும் உண்டு பொருட்பாலிலே இரண்டாவது வள்ளுவன் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளான்.அத்தகைய கல்வி பற்றி சற்றேனும் தெரிந்து கொள்ள வேண்டுமல்லவா? வாருங்கள் இனிவரும் வழிகளில் எனது பேனையின் கிறுக்கல்கள் உங்களுக்கு விளக்கம் அளிக்கும்.

உலகின் ஒரு அங்கமாக ஒரு விலங்காக காட்டில் அங்கும் இங்கும் தாவி,மோதி மரங்களில் குடிகொண்டு வாழ்ந்தவன்தான் மனிதன் என்றால் யாரேனும் நம்புவாரோ? என்ன வதந்தி இது? என்று கேட்கத்தான் வாய் வரும். ஏனெனில் அன்று இருந்தது.இன்று அவன் இல்லை.முற்றிலும் மாறிவிட்டது.அறிவு அவனிடம் தஞ்சமடைந்து விட்டது.அதற்கான அத்திவாரம் எங்கே?இத்தகைய மனித சாம்ராஜ்ஜியத்திற்கான அடிக்கல் எங்கே? சற்றுக் கண்மூடி யோசித்தால் கிடைத்து விடும் விடை.

தாயின் கருவறையில் பத்துத் திங்கள் கண்மூடிக் கிடந்து இப் புவியின் மீது புதிதாக மலர்ந்த தாமரை போல மலர்ந்திருந்தோம்.சில வருடங்கள் கழிந்தபின்னர் ஒரு நன்னாளல்ஸ்ரீ நம் பிஞ்சுக் கரங்களை பச்சை அரிசியில் ஏதோ வட்டம் போட்டுச் சுற்றியிருப்பார்கள்.நமக்கு அது அப்படித்தான் தெரியும். பின் பள்ளி எனும் பதியதோர் குடும்பதினுள் நம்மை இணைத்துவிட்டனர்.அங்கு கிடைத்தது அறிவிற்கான சாவி.கல்வி எனும் மூன்றெழுத்து மந்திரம்.அறிவின் தோட்டத்திற்கான வாய்க்கதவைத் திறப்பதற்கான மந்திரம்.

நீ எவ்வளவு சொத்து சேர்த்து வைத்தாலும்,நீ எவ்வளவு தூரம் உன் கஜானாவை பெருப்பித்தாலும் உன் மரணத்தின் பின் அவை எதுவும் உன்னுடையது அன்று.எவனோ ஒருவன் சொந்தம் கொண்டாடுவான். வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படலாம்;தீயால் இரையாக் கப்பட்டு சாம்பலாகலாம் ;கள்வர் கூட்டம் களவாடிச் செல்லலாம்.ஆனால் நீ பெற்ற கல்வி உன்னை விட்டு என்றும் பிரியாது.நிழல் கூட வெளிச்சம் இருக்கும் மட்டுமே. இருட்டுக்கூட கண்டால் அதுவும் உனை தனிமையில் தவிக்கவிடும். ஆனால் உன்னிடம் இருக்கும் கல்வியறிவு உனக்கானது.உனக்கு மட்டுமே உரித்தானது.வேறு ஒருவரும் சொந்தம் கொண்டாட முடியாத ஒரேயொரு சொத்து.

'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்பர். நீ இளம் பராயத்தில் உன்னுள் உட்செலுத்திக் கொள்ளும் கல்வியின் வீர்ஸ்ரீயம் இளமையில் புரியாது. வளர்ந்து பொறுப்பக்களைச் சுமக்கும் போதுதான் புரியும். அன்று உன் உச்சி குளிரும். கல்வியின் சக்தியை உணர்வாய்.

தேசங்களைக் கைப்பற்றி உலகை ஆளும் வேட்கை கொண்டு மாவீரர்கள் பலரும் யுத்தம் எனும் பாதையைத் தெரிவு செய்து பல்லாயிரங்கோடி உயிர்களின் குருதியில் பூமித்தாயின் சரீரத்தை சிவப்பாக்கினர். பல பெண்களை விதவைகள் ஆக்கினர். எண்ணிலடங்காத குழந்தைகள் அநாதைகளாக்கினர். தரணி தோறும் பசி,பட்டினி,நோய்கள் என்று மரணபயம்உலாவந்தது.மாபெரும்அழிவு,உலக மகா யுத்தங்கள் இதற்கு எடுத்துக்காட்டு. யுத்தத்தில் எதிரியின் உடலைக் கூறுபோடும் வாள்வீச்சுக்களோ, பகைவனின் நெஞ்சைத் துளைத்து குருதியைப் பாயவைக்கும் கூரிய அம்பின் முனையின் கூர்மையோ உலகை ஆளாது.ஆனால் சிறிய எழுதுகோலின் முனை உலகை ஆளும் சக்தி கொண்டது.ஈட்டியைத் தீட்டாதே.உன் புத்தியை தீட்டு. புத்திக் கூர் மையை மேலும் கூட்டு. உன் தலைவிதியை மாற்றியமைக்கலாம். விதியை நம்பி வாழ்க்கையை ஓட்டுபவனாக நீ இருப்பின் இவ் வசனம் உனக்கானது. 'விதியை நம்பியவன் வீதியில் நிற்பான்.மதியை நம்பியவன் மதியைத் தொடுவான்.'என் வாழ்வின் திருப்புமுனை உனக்கும் அவ்வாறு அமைந்தால் மகிழ்ச்சி.

**'கேடில் விழுச் செல்வம் கல்வி யொருவர்க்கு**
**மாடல்ல மற்றயவை'**

என்கிறார் வள்ளுவர்.கல்வியைப் போன்று ஒருவனை அழகனாக்கும் அணி பிறிதொன்றில்லை. கல்வியை தலையாய செல்வமாகக் கருதும் ஒருவன் பிற பொருட்கள்,ஒப்பனைகளால் உண்டாகும் போலி வசீகரத்தை ஒரு நாளும் நாடமாட்டான். அது அவனுக்குத் தேவையாகவும் இருக்காது.

இதனையே நாலடியார் எனும் அற நூலும் விளக்குகின்றது.

**'குஞ்சிஅழகும்கொடுந்தானைக்கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்லநெங்சத்து**
**நல்லம்பாம் எனும் நடுவு நிலமையால்**
**கல்வியழகே அழகு' .**

உண்மையான வார்த்தைகள் .விதம் விதமான அலங்காரங்கள் எதுவும் அழகல்ல.உன்னை நெறி பிறழவைக்கும் தடுமாற்ற மோகங்கள் அவற்றை நம்பாதே. அவற்றின் அழகு பாலை வனத்தில் தோன்றும் கானல் நீர் போன்றது. தூரத்தில் இருக்கும்போது புலப்படும். அருகில் போனால் காணாமல் போய்விடும்.கல்வி என்பது அத்தகைய ஏமாற்றும் அழகன்று.உடன் அறிவுத் தாகத்தைத் தணிக்கும் அறிவின்படி நிற்றல் வனப்பு.

கற்றவனின் சிறப்பு தேவர்களாலும் போற்றப்படக் கூடியது. மாபெரும் மன்னர்களை கூட தம் முன் பண்ணிய வைக்கும் சிறப்பு. இதனையே பின்வரும் பாடலடிகள் எடுத்துக் கூறுகின்றன.

**'மன்னனும் மாசறக் கற்றேனும் சீர்தூக்கின்**
**மன்னற் கற்றோன் சிறப்புடையன்**
**மன்னர்க்குத் தன் தேசமல்லாற் சிறப்பில்லை**
**கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு'**

கற்றோனின் சிறப்பிற்கும் மரியாதைக்கும் எல்லை என்பது கிடையாது .எத்திசை செல்வான் எனினும் வாழ்த்துக்கள் தேடி மலை போலக் குவியும் மழை போலப் பொழியும்.அதுவே அதுவே அவனுடைய தனித்துவம் கல்வியின் நெருங்க முடியாத் தனித்துவம்.

இன்றைய உலகு எவ்வளவோ மாறிவிட்டது.எங்கு பார்த்தாலும் நவீன தொழினுட்ப சாதனங்களின் ஆதிக்கம் மக்களின் இயந்திர வாழ்க்கை.இத்தகைய சூழல் வெற்றி பெற்று சாதனையாளர்களாய் நாம் வாழ வேண்டுமானால் இத்தகைய மாற்றங்களுக்கு இயைந்து நம் வாழ்க்கை முறையை தகுந்த முறையில் மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும்.அதற்காக கல்வி மிக முக்கியமாக காணப்படுகிறது.கல்வி இன்றி இனி வரும் நாட்களில் குடும்பத்தை வெற்றிகரமாக நடாத்திச் செல்வதென்பது முடியாத காரியம். சுருக்கமாகச் சொல்வதெனின் ஆகாயக் கோட்டை கட்டுவதைப் போன்றது.

அரசாங்கம் வழங்கும் பாடநூல்களை மட்டுமே வைத்துக் கொண்டு ஜெயித்துவிடலாமென்று சோர்ந்து போகாதே. அது அடிப்படை விடயங்கள் மட்டுமே.அதையும் தாண்டி எத்தனையோ விடயங்கள் உள்ளன.அவற்றை தேடி அறிந்து கொள்.கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு.கைம்மண்ணளவு போதும் என்று கைவிடாதே.வாமணனைப் போல் நிலத்தைக் கேள்.உன்னிடத்தில் தேடல் எனும் பசித்தீயை எரியவிடு.அடிக்கடி நூல்களைக் கற்று ஒவ்வொரு வார்த்தைகளாலும் அதற்குத் தீனி போடு. ஆறிவை அடையும் வேட்கை உன்னுள் வாசலைவிட்டு பற்றியெரிய வேண்டும்.உன் வாழ்க்கை வளம் பெறும்.

நீ கற்ற கல்வியைப் பிறர்க்கும் கற்றுக் கொடு.உன் அறிவு மென்மேலும் வளரும்.இதைக் கண்டு நீ மட்டற்ற மகிழ்ச்சி கொள்வாய்.இதனை

**'தாமின்புறுவது உலகின் புறக்கண்டு**
**காமுறுவர் கற்றறிந்தார்'**

என்கிறது வள்ளுவன் வாக்கு.கல்வியைக் காசாக்காதே.கல்வி வியாபாரப் பொருளல்ல.உலகைப் பார்க்க உயிர் கொடுப்பவள் அன்னை.அப்படியெனில் உலக வாழ்வின் உண்மைகளை அறிய உன் அறிவுக்கண்களை விழிப்பித்து உனக்கு ஞான உயிர் தருபவளான கல்வியும் அன்னையே.கல்வியைப் பணத்தை ஈட்டும் வியாபாரப் பொருளாகப் பாவிப்பாயானால் அது உன் அன்னையை தூற்றுவதற்கும் நகையாடுவதற்கும் ஒத்தது.இதைப் போன்றதொரு இழிவான செயல் வேறொன்றும் இல்லை.

நம் பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம்.ஆனால் நம் வாழ்க்கை ஒரு சரித்திரமாகவும் நம் இறப்பு ஒரு வரலாறாகவும் இருக்க வேண்டும்.தேவையற்ற ஆசைகளைத் துறந்திட்டு நூல்களைக் கையெடு.எதிர்கால வெற்றிக்கான உன் சிறகுகளை சாகச வானில் விரித்து பறந்து திரிய வித்திடு.கல்வியால் உன் வாழ்வு வளம் பெற என் பிரார்த்தனைகள்

**நி.அன்பானுகா**
யா/வேம்படி மகளிர் கல்லூரி.

# சைவமும் வைணவமும் சங்கமிக்கும் சமயவிழா



மாதங்களில் நான் மார்கழி என்று கீதையில் கண்ணன் கூறுகிறார்.திருவெம்பாவையினைத் தந்து சிவனை முன்னுறுத்துகிறார் மணிவாசகப் பெருமான் மார்கழியில். ஆண்டாள் நாச்சியாரும் வந்து திரு வாய் மொழியினை வழங்கித் திருமால் பெருமையைப் பேசுகின் றார். சைவமும் வைணவமும் சங்கமிக்கும் சமய நிகழ்வாய் , சமய விழாவாய் மார்கழியில் திருவெம்பாவையும் திருப்பாவையும் அமைகிறது அல்லவா ! ஆனால் மார்கழியில் மங்கல நிகழ்ச்சிகளுக்கு இடங் கொடுக்காமல் விட்டு விட்டோம். இந்த வகையில் இணைவதாய் ஆடியும் வந்து நிற்கிறது. ஆனால் ஆடியும் - மார்கழி போல் மகத்தான மாதமேயாகும். மார்கழியில் சைவமும்வைணமும்சங்கமிப்பதுபோல - ஆடியிலும் சங்க மிக்கிறது என்பது மனமிருத்த வேண்டிய கருத்தெனலாம்.

ஆடியில் வருகின்ற பூரம் மிகவும் முக்கியத்துவம் மிக்கதாகும். ஆடிப்பூரம் சைவ ஆலயங்களிலும். வைணவ ஆலயங்களிலும் மிகவும் முக்கியத்துவம் மிக்க சமய நிகழ்வாய் , சமய விழாவாய் இடம்பெறுவதைநாம்காணக்கூடியதாகவே இருக்கிறது.ஆடிப் பூரம் அம்மனின் அற்புதத் திருவிழாவாகும். மக்களையும், உலகினையும் காப்பதற்கு அம்பாள் சக்தியின் உருவாய் அவதரித்த தினமாய் ஆடிப்பூரம் கொள்ளப்படுகிறது. அதே வேளை வைணவம் போற்றும் பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான ஆண்டாள் நாச்சியார் அவதரித்த தினமாகவும் கொள்ளப்படுகிறது. உமா தேவி அவதாரம் செய்ததாய் சிவபுராணம் சொல்லுகிறது. ரீவில்லிபுத்தூரில் துளசிச் செடிக்கு அருகில் குழந்தையாய் ஆண்டாள்நாச்சியார்அவதாரம் செய்ததாக வைணவர்கள் நம்புகின்றார்கள். சக்தியின் அவதாரமாகவே ஆண்டாளின் அவதாரம் கொள்ளப்படுகிறது என்பதும் நோக்கத்தக்கது. இந்த ஆடிப்பூர தினத்தில்தான்; சித்தர்களும், யோகிகளும் , தவத்தைத் தொடங்குவார்கள் என்று புராணங்கள் புகலுவதும் கருத்திருத்த வேண்டியதே யாகும்.



உலகத்தின் நன்மைக்காகவே அவதாரங்கள் நிகழ்கின்றன. இராமராய், கிருஷ்ணராய் , பகவான் விஷ்ணு அவதாரம் செய்தார் என்பதைப் புராணங்கள் எடுத்துரைத்துநிற்கின்றன. அந்தஅவதாரங்களுக்குத் துணையாக லக்ஷுமி தேவி -சீதையாய் , ருக்மணியாய் பூமியில் அவதாரம் செய்கிறார்கள்.

ஆனால் ஆண்டாள் நாச்சியார் அவதாரம் இம்மண்ணில் நிகழ்ந்த வேளை அவளுக்கு துணையாக , இணையாக பகவான் விஷ்ணு எந்தவித அவதாரமும் மேற் கொள்ளவே இல்லை என்பதுதான் மிகவும் முக்கிய மாகும்.ஆனால் சிலையாய் இருந்த கண்ணனையே மனத்தில் உறுதியாய் இருத்தி அவனையே மணப்பேன் என்னும் வைராக்கியத்தை உலகுக்கே காட்டிய பெண்ணாய் வைணவத்தின் மாமலர் ஆண்டாள் நாச்சி யார் போற்றப்படுகிறார் என்பது மனமிருத்த வேண்டிய கருத்தாகும். அப்படியான அந்த ஆண்டாள் நாச்சியாரைக் கொண்டாடும் அற்புத நாளாகவும் ஆடிப்பூரம் அமைகிறது என்பதும் சிறப்பல்லவா ! பெரியாழ்வார் என்பவர் வைணவத்தில் மதிப்பக்கப்படுகின்ற மிகச்சிறந்த அடியார் ஆவார்.அவரின் வளர்ப்பு மகளாய் ஆண்டாள் நாச்சியார் ஆவது ஆண்டவனின் திருவருளே.

சைவமும் , வைணமும் , பெயரளவில் இரண்டாக இருந்தாலும் - இறைவனை உறவாய் ஆக்கிக் கொள்ளுவதில் ஒன்றுபட்டே நிற்கின்றன. தாயாய், தந்தையாய், சகதோழனாய், காதலனாய், காதலியாய், என்றெல்லாம் எண்ணி கசிந்து உருகிப் பின்னிப்பிணைந்துநிற்பதை யாவரும் மனங்கொள்ளுதல் வேண்டும். இந்த வகையில் உலகினைக் காத்து நிற்கும் பெருஞ்சக்கியான அம்பாளை பல நிலைகளில் கண்டும், அந்தச் சக்திக்கு தங்களின் விருப்பங்கள் எது எது இருக்கிறதோ அத்தனையையும் நிறைவேற்றிப் பார்ப் பதில் பேரானந்தம் அடைகிறார்கள். அப்படிப் பேரானந்தம் அடையும் பாங்கினை ஆடிப் பூரம் காட்டி நிற் கிறது என்பதே முக்கிய நிலையாகும். இங்கே செய்யப்படும் செயல்களுக்கு முக்கிய காரணம் - பக்தியின் பரவசம் என்றுதான் எடுத்துக்கொள்ளல் வேண்டும்.

(7ஆம் பக்கம் பார்க்க)

# சைவமும் வைணவமும் சங்கமிக்கும் சமயவிழா.........





(6ஆம் பக்கத் தொடர்ச்சி.....)

ஆண்டாள் நாச்சியார் கண்ணனையே கணவனாக்குவேன் என்று ஒரே பிடிவாதமாய் இருக்கிறார்.கடவுளை மானிட உருவில் இருக்கும் ஒரு பெண் கணவனாய் கொள்ளுதல் பொருந்துமா என்று விமர்சனம் செய்வது பொருத்தமற்றதாகும். இங்கு பக்தியின் உணர்வுதான் மேலோங்கி நிற்கிறது. மணிவாசகப் பெருமான் எந்தளவுக்கு சைவத்தில் முக்கியத் துவத்துவப்படுத்தப்படுகிறாரோ அவ்வாறே ஆண்டாளும் அமைகிறார். ஆண்டாள் தன்னுடைய பதினைந்தாம் வயதில் இறைவனுடன் இரண்டறக் கலந்ததாய் சொல்லப் படுகிறது. அதற்கு முன்பாகவே திருப்பாவையையும் , நாச்சியார் திரு மொழியையும், தந்திருக்கிறார். ஆண்டாளின் இவ்விரு படைப்புக்களுமே , தத்துவத்தையும் , பக்தியையும் , தேனாய் இனிக்கச் செழுந்தமிழில் பொக்கிமாய் அமைந்திருகிறது.

இப்படிப் பெருமைக்குரிய ஆண்டாள் நாச்சி யாரை அகத்தினில் அமர்த்திட ஆடிப்பூரம் அமை கிறது என்பது மனங்கொள்ளத்தக்கது.வைணவ ஆலயங்களில் ஆடிப் பூரம் மிகவும் பக்திபூர்வ மாய் பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

சைவ ஆலயங்களில் அம்பாளை முன்னிறுத்தி ஆடிப்பூரம் பெருவிழாவாய் கொண்டாடப்படுகிறது. அம்பாளுக்கு பத்து நாட்கள் திருவிழாவாய் ஆடிப் பூரம் அமைவதையும் காணலாம். உலகத்தின் இயக்கத் துக்குக் காரணமான சக்தியே அம்பாளாய் இருப்பதாய் எண்ணும் அடியார்கள் தங்கள் விருப்பத்துக்கு அமைய - அம்பாளுக்குப் பலவித அலங்காரங்களைச் செய்து தங்கள் ஆராத பக்தியைக் காட்டி நிற்ப தைக் காணக்கூடியதாக ஆடிப்பூரம் காணப்படும். அம்பாளுக்கு வளை யல்களால் அலங்காரம் செய்வது, அம்பாள் பூப்படைந்துவிட்டாள் என்று பலவித சடங்குகளை ஆற்றுவது, என்று ஆடிப்பூரத்தை ஆனந்த விழாவாக ஆக்கியே விடுவார்கள்.

அம்பாளையும் தங்கள் குடும்பத்தில் ஒரு உறவாகவே எண்ணி - தங்கள் குடும்பப் பெண்கள் எப்படியெல்லாம் அலங்கரிப்பார்களோ அப்படியே அலங்கரித்து பேருவகையும், பேரானந்தமும் பெறுவதை ஆடிப் பூரத்தில் கண் டிடலாம். மஞ்சள் காப்பு , சந்தனக்காப்பு , குங்குமக் காப்பு என்றெல்லாம் நடத்தி , வளைகாப்பும் நடத்து- வார்கள்.

அம்மனுக்குஅலங்காரம்செய்யப்படும்வளையல் கள் பலவகையாய் அமையும். அந்த வளையல்கள் நிறைவில் அனைவருக்கும் அருட் பிரசாதமாய் வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

திருமணம் ஆகாதவர்க்குத் திருமணம் விரைவாய்திருமணம் ஆவதற்கும், மனக்கசப்பினால் பிரிந்த தம்பதிகள் ஒன்று சேர்வதற்கும் , ஆடிப்பூரத் தின் வழிபாட்டால் நல்ல பலன் கிடைக்கிறது என்னும் நம்பி க்கை யாவரிடமும் நிறைந்தே இருக்கிறது. தோங்கள் கொண்ட தம்பதியர்களுக்குத் தோங்கள் நீங்கி விடும் என்னும் நம்பிக்கையும் இருக்கிறது.

சைவமும். வைணவமும் சங்கமிக்கும் சயயப் பெருவிழா ஆலயங்கள் தோறும் நடக்கும் ஆடிப்பூரம் அமைந்த ஆடி மாதத்தை எப்படி ஒதுக்கிட முடியும்? ஆடிப்பூரம் அம்மனுக்கு உரிய பக்குவமான நாளாகும். பக்தர்கள் மனக் குறைகளைக் களையும் பாங்கான நாளாகும்.

அமங்கலமேஆடியெனஎண்ணும்எண்ணத்தை அகத்தைவிட்டே அகற்றிடுவோம். ஆடியும் ஆடியில் வருகின்ற அத்தனை நாட்களுமே அம்மனு க்குரிய மங்கல நாட்களேயாகும். ஆடிப்பூரம் வாழ்வில் மனமகிழ்ச்சியையும் , மனவமைதியையும் , மன எண்ணங்களையும் நிறைவேற்றித் தரும் உன்னத நாளாகும். அது மட்டுமல்ல சைவமும் வைணவமும் சக்தியை முன்னிறுத்திச் சங்கமித்து ஒரே நிலையில் பயணப்படும் பக்தி நிறை நாளுமாகும் என்பதை மனமிருத்துதல் வேண்டும்.

ஆத்தாளை எங்கள் அபிராமவல்லியை அண்டமெலாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளை புவியடங்கக்
காத்தாளை ஐங்கணை பாசாங்குசமும் கரும்புமங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைய் தொழுவார்க்கு
ஒருதீங்கில்லையே இன்றே திருவாடிப்பூரம் எமக்காக

அன்றே ஆண்டாள் அவதரித்தாள் – குன்றாத
வாழ்வான வைகுந்த வான்போகம் தன்னை இகழ்ந்து
ஆழ்வார் திருமகளாராய்
திருவாடிப்பூரத்துச் செகத்துதித்தாள் வாழியயே

திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியவே
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளாய் வாழியவே
பாதகங்கள் தீர்க்கும் பரமனடி காட்டும்

வேதம் அனைத்திற்கும் வித்தாகும் – கோதைதமிழ்
ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானுடரை
வையம் சுமம்பதும் வம்பு .

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/-
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2
3

காலைக்கதிர் Kalaikkathir

# காணிகளை விடுவிப்பதற்கான மக்களின் கோரிக்கை நியாயம்

## ஏற்றுக்கொள்கிறார் பவித்திரா

வடக்கு , கிழக்கிலுள்ள மக்கள் காணிகளை விடுவிக்குமாறு முன்வைக்கும் கோரிக்கைகள் நியாயமானவையாகும். அப்பகுதிகளில் போர் நிறைவடைந்த பின்னர் வன வள பாதுகாப்பு திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்ட காணிகள் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் அவை நிச்சயம் விடுக்கப்படும் என வனஜீவராசிகள் மற்றும் வனவளபாதுகாப்பு அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி உறுதியளித்தார்.

ஜனாதிபதி ஊடகமையத்தில் நடைபெற்ற ஊடகவி-யலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு உறுதியளித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில் -

1980ஆம் ஆண்டுகளின் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கில் பெரும்பாலான மக்கள் தமக்கு உரிமமுடைய காணிகளை கைவிட்டுச் சென்றுள்ளனர்.

அதன் பின்னர் 30 ஆண்டுகளின் பின்னர் இவை காடுகளாகியுள்ளன. இவற்றில் தொடர்ந்தும் வன வள பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் வைத்திருக்க வேண்டிய காணிகளும் உள்ளன.

மேலும் பல காணிகள் உண்மையில் 1985 இல் உரிமம் காணப்பட்ட மக்களின் இடங்களாகும்.

எனவே யுத்தம் காரணமாக தம்மால் கைவிட்டுச்செல்லப்பட்ட தமது மூதாதையரின் காணிகளை விடுவிக்குமாறு அந்த மக்களால் விடுக்கப்படும் கோரிக்கைகள் நியாயமானவையாகும். எவ்வாறிருப்பினும் அவை வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வன வள பாதுகாப்பு திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ளன.



இது தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையிலுள்ளன. எனவே இது தொடர்பில் விரிவான தகவல்களை வெளிப்படுத்த முடியாது. எவ்வாறிருப்பினும் மக்களுக்குரிய காணிகள் நிச்சயம் அவர்களிடம் கையளிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாவுள்ளோம். அரசாங்கமும் அதே நிலைப் பாட்டையே கொண்டுள்ளது. - என்றார். (05)



# ஒருநாள் சேவை வடக்கு மக்களுக்கு குருநாகலையிலேயே கிடைக்கும்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு

தேசிய அடையாள அட்டை ஒருநாள் சேவையை வவுனியாவில் ஆரம்பிக்க பௌதீக வளம் கிடையாது. இந்த ஆண்டு இறுதி பகுதியில் குருநாகல் மாவட்டத்தில் தேசிய அடையாள அட்டை ஒருநாள் சேவை விநியோகம் ஆரம்பிக்கப்படும். வடக்கு மாகாணத்தில் ஒருநாள் சேவை ஆரம்பிக்கப்படும் வரை வடக்கு மாகாண மக்கள் குருநாகல் மாவட்டத்தில் ஒருநாள் சேவையை பெற்றுக்கொள்ளலாம் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு வேளைக்கான கேள்வி நேரத்தின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும் உரையாற்றியவை வருமாறு -

ஒருநாள் சேவை ஊடாகத் தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்வதற்கு வடக்கு மாகாணத்தில் இருந்து 25 சதவீதமானோர் வருகை தரவில்லை. 5 சதவீதத்துக்கும் அதிகமானோர் மாத்திரமே வருகை தருகின்றனர். நிறைவடைந்த 06 மாத காலப்பகுதியில் தேசிய ஆட்பதிவு திணைக்களத்தில் ஒருநாள் சேவை ஊடாக அடையாள அட்டை பெற்றுக்கொள்வதற்கு 112,596 விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்துள்ளார்கள். இவற்றில் 4,968 விண்ணப்பங்கள் வடக்கு மாகாணத்தை சேர்ந்தவை.

வடக்கு மாகாணத்தில் வவுனியா பிரதேச செயலகத்தில் தேசிய அடையாள அட்டை விநியோக பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஒருநாள் சேவையை வவுனியாவில் ஆரம்பிக்க பௌதீக வளங்கள் அங்கு கிடையாது. வடக்கு மாகாணத்தில் ஒரு பிரதேசத்தில் ஒருநாள் சேவை விநியோகத்தை ஆரம்பிக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு இறுதி பகுதியில் குருநாகல் மாவட்டத்தில் தேசிய அடையாள அட்டை ஒருநாள் சேவை விநியோகம் ஆரம்பிக்கப்படும். வடக்கு மாகாணத்தில் ஒருநாள் சேவை ஆரம்பிக்கப்படும் வரை வடக்கு மாகாண மக் கள் குருநாகல் மாவட்டத்துக்கு வருகை தந்து அந்த சேவையை பெற்றுக் கொள்ளலாம். - என்றார். (05)

# குருந்தூர்மலைச் சம்பவம்

# பொலிஸார் தண்டிக்கப்பட வேண்டும் முன்னணியின் செயலாளர் வலியுறுத்து

குருந்தூர்மலையில் தமிழ் மக்களின் விழிபாட்டு உரிமையைத் தடுத்துநிறுத்தி, சப்பாத்துக் கால்களால் பொங்கலுக்கான தீயை அணைத்து மத நிந்தனையில் ஈடுபட்ட பொலிஸார் தண்டிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தினார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன்.

வவுனியாவில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும் போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள குமுழமுனை பிரதேசம் என்பது தமிழர்களுடைய வரலாற்றுடன் தொடர்புடைய இடம். அங்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆதிசிவன் ஐயனார் ஆலயம் அமைந்துள்ளது. உடைந்த நிலையில் இருந்தாலும் தமிழர்கள் பல நூற்றாண்டுகளாக அங்கு வழிபாடுகளை மேற்கொண்டு வந்துள்ளார்கள்.

போருக்குப் பிற்பாடு கடந்த ஒருசில வருடங்களுக்கு முன் அவ்விடத்தில் இருந்த ஆதி சிவன் ஐயனார் இனவாத வெறியர்களினால் அகற்றப்பட்டுள்ளது. உடைத்து எறியப்பட்டுள்ளது. இருந்தாலும் இந்த இடத்தில் தமிழ் மக்கள் வழிபாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ள நிலைமையில் ஜூன் 14 அந்த இடத்தில் பொங்கல் செய்து வழிபாடுகளை மேற்கொள்வதற்காக நூற்றுக்கணக்கான பொதுமக்கள் அந்த இடத்திற்கு சென்றிருந்தார்கள். நாங்களும் வழிபாடுகள் செய்யச் சென்றிருந்தோம்.

அப்போது அங்கு தென்னிலங்கையில் இருந்து வருகை தந்த பௌத்த பிக்குகளும் சிங்கள இளைஞர்களும் வன்முறை மற்றும் அச்சுறுத்தல்களில் ஈடுபட்டிருந்தார்கள்.

அந்த நேரத்தில் பொலிசார் பௌத்த பிக்குகளுக்கு ஆதரவாகவும், சிங்கள பௌத்த பேரினவாத கும்பலுக்கு சார்பாகவும் செயற்பட்டிருந்தார்களே தவிர, தமிழ் மக்கள் வழிபாடுகளை மேற்கொள்ள அவர்கள் இடையூறு செய்தமைக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஒரு கட்டத்தில் நாங்கள் ஆலய பீடத்தில் ஏறி வணங்க முற்பட்ட போது பொலிசார் தடை விதித்தார்கள். அந்த பீடத்திற்கு முன்பாக பொங்கல் செய்வதற்கு அடுப்பினை பற்ற வைத்த போது பொலிசார் தடை விதித்து காலால் உதைந்து அந்தத் தீபத்தை அணைத்தார்கள்.

அந்த பீடத்திற்கு முன்பாக அமர்ந்து பஜனைகளை செய்ய முற்பட்டபோது பௌத்த பிக்குகள் ஆலய பீடத்தில் ஏறி பிரித் ஓதினார்கள். அப்போது எமது மக்களும் அந்த பீடத்தில் ஏறி வணக்க நிகழ்வுகளை செய்ய முற்பட்ட போது பொலிசார் தமிழர்களை அந்த இடத்தில் இருந்து அப்புறப்படுத்தினார்கள். அதனாலேயே பொலிஸாருடன் சிறு கருத்து முரண்பாடு அங்கு ஏற்பட்டது.

அதற்கு பிற்பாடு பௌத்த பிக்குகள் அந்த இடத்தில் இருந்து பொலிசாரால் வெளியேற்றப்பட்டனர். அதனைத் தொடர்ந்து பொலிஸாரினால் பலாத்காரமாக வழிபாடுகளுக்கு வந்த தமிழ் மக்களும் வெளியேற்றப்பட்டனர். பொலிஸார் பெண்களுடன் மோசமாக நடந்துகொண்டனர். அதேபோன்று முதியவர்கள், சிறுவர்கள் என்ற வேறுபாடு இல்லாது அனைவரையும் இழுத்து விழுத்தி அவர்களை அச்சுறுத்தி அகற்றினர்.

நாங்கள் நிலத்தில் இருந்து பஜனை செய்துகொண்டிருந்த போது நான் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்று கூறிய பிற்பாடும் எனது சேட்டில் பிடித்து இரண்டு மூன்று முறை இழுத்து அந்த இடத்தில் இருந்து அகற்ற முயற்சி செய்தார்கள். முழங்காலால் எனது முதுகில் தள்ளி கீழே விழுத்தினார்கள்.

கைகளை பிடித்து இழுத்து நிலத்தில் போட்டு மோசமாக அவமானப்படுத்தினார்கள். அதேபோன்று முன்னால் மாகாண சபை உறுப்பினர் ரவிகரன், சமூக செயற்பாட்டாள் பீற்றர் இளஞ்செழியன், வேலன் சுவாமிகள் மற்றும் எங்களுடன் வந்திருந்த செயற்பாட்டாளர்கள் தவபாலன் உட்பட பலர் மோசமாகத் தாக்கப்பட்டர்கள்.

இது எங்களது வழிபாட்டு உரிமையை மறுக்கின்ற செயல். அடிப்படை உரிமையை மோசமாக மீறுகின்ற செயல். நாங்கள் மிக மோசமாக துன்புறுத்தல், அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளோம். நீதிமன்றில் இந்த நிகழ்வை தடைசெய்ய கோரி பொலிசாரால் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அந்த வழக்கில் தடையுத்தரவு வழங்கப்படாது, நீதிபதி அவர்கள் தெளிவாக வழிபாடுகளுக்கு அனுமதி வழங்கியிருந்தார். அதன் பிற்பாடு கிளிநொச்சி மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மற்றும் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் தான் நேரடியாக இந்த செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளார்கள். வன்முறையை துண்டியதற்காக பொலிசார் தண்டிக்கப்பட வேண்டும் - என்றார்.

# கோதுமை விலை இங்கு ஏன் குறையவில்லை?

## அநுரகுமார எம்.பி. கேள்வி

உலக சந்தையில் கோதுமை மாவின் விலை சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் கோதுமை மாவின் விலையை அரசாங்கம் ஏன் குறைக்கவில்லை.



அனுமதி பத்திரம் இல்லாதவர்கள் கோதுமை மா இறக்குமதி செய்வதை தடை செய்துவிட்டு இரு பிரதான நிறுவனங்களுக்கு மாத்திரம் கோதுமை மா விநியோகத்தில் தனியுரிமை வழங்கப்பட்டுள்ளமை முறையற்றது என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

நாடளாவிய ரீதியில் 6 ஆயிரத்துக்கும் அதிகமான வெதுப்பகங்கள் (பேக்கரிகள்) காணப்படுகின்றன. இவற்றில் 5 லட்சத்துக்கும் அதிகமானோர் தொழில் புரிகிறார்கள்.

பெருந்தோட்ட மக்கள் உட்பட பெரும்பாலானவர்கள் மாவிலான உணவு பொருள்களை பிரதான உணவாக உட்கொள்கிறார்கள். ஆகவே, நாட்டின் பிரதான உணவு பொருள் மூலமாக கோதுமை மா காணப்படுகிறது.

இவ்வாறான பின்னணியில் அனுமதிப்பத்திரம் இல்லாமல் கோதுமை மா இறக்குமதி செய்வதற்கான தடை விதிக்கப்பட்டு அதற்கான வர்த்தமானி 2023.06.14 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டாளரும் இறக்குமதி தொடர்பில் உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நாட்டில் கோதுமை இறக்குமதி மற்றும் விநியோகத்தில் பிறீமா, செரண்டிப் ஆகிய நிறுவனங்கள் முன்னிலை வகிக்கின்றன. இவ்விரு நிறுவனங்களும் கோதுமை விதை இறக்குமதி செய்து அவற்றை மாவாக்கி, பின்னர் விநியோகிக்கின்றன.

தற்போதைய விலைக்கு அமைய சந்தையில் ஒரு கிலோ கிராம் கோதுமை மா 210 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் கோதுமை விதைகளை இறக்குமதி செய்யும் பிரதான இரு நிறுவனங்களும் ஒரு கிலோகிராம் கோதுமை விதைக்கு மூன்று ரூபா வரி செலுத்துகிறது.

உலக சந்தையில் தற்போது கோதுமை மா மற்றும் கோதுமை வித்து ஆகியவற்றின் விலை சடுதியாகக் குறைவடைந்துள்ளது. துருக்கி நாட்டில் இருந்து கோதுமை மா இறக்குமி செய்தால் ஒருகிலோ கிராம் கோதுமை மாவின் விலையை 110 ரூபாவாக நிர்ணயிக்கலாம்.

உலக சந்தையில் கடந்த ஜனவரி மாதம் ஒரு மெற்றிக்தொன் கோதுமை மாவின் விலை 550 டொலராக காணப்பட்டது.

ஆனால், தற்போது ஒரு மெற்றிக்தொன் கோதுமை மாவின் விலை 355 டொலராக காணப்படுகிறது. மறுபுறம் கோதுமை கடந்த ஜனவரி மாதம் 310 டொலராகக் காணப்பட்ட ஒரு மெற்றிக் தொன் கோதுமையின் விலை தற்போது 228 டொலராகக் குறைவடைந்துள்ளது.

உலக சந்தையில் கோதுமை வித்தின் விலை குறைப்பு, டொலரின் பெறுமதி வீழ்ச்சி, ரூபாவின் பெறுமதி உயர்வு ஆகிய காரணிகளால் கோதுமை வித்தை இறக்குமதி செய்யும் இவ்விரு நிறுவனங்களும் அதிக இலாபம் அடைகின்றன. இந்த நிறுவனங்கள் செலுத்தும் இறக்குமதி வரிகளுக்கும் தற்போது விலக்கு வழங்கப்பட்டுள்ளது.

அனுமதி பத்திரம் இல்லாத தரப்பினர் கோதுமைமா இறக்குமதி செய்வது தடைசெய்-யப்பட்டுள்ளதால் இவ்விரு நிறுவனங்களும் கோதுமை மா விநியோகத்தில் தனியுரிமை செலுத்துகிறது.

இது முறையற்றதாகும். கோதுமை மா விலைக்குறைப்பின் நிவாரணத்தை இந்த நிறுவனங்கள் நுகர்வோருக்கு வழங்கவில்லை. ஆகவே, இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தி நடுத்தர மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். - என்றார். (05)

# 'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்துக்கு அரச அதிகாரிகள் பங்களிப்பு தேவை

## சாகல ரத்நாயக்க தெரிவிப்பு

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை வலுவூட்டவும், மக்களுக்கு நிவாரணங்களை வழங்கவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின், வழிகாட்டலுடன் ஆரம்பிக்கப்பட்ட அஸ்வெசும சமூக நலன்புரித் திட்டத்தை நடைமுறைப்படுத்து-வதற்கு அரச அதிகாரிகளின் செயலூக்கமான பங்களிப்பு இன்றியமையாதது என ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.



குறைந்த வருமானம் பெறும் மக்களின் முன்னேற்றத்துக்காக எடுக்கப்பட வேண்டிய கொள்கை ரீதியிலான தீர்மானங்கள் தாமதமின்றி எடுக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்ததுள்ள அவர், அந்த கொள்கைத் தீர்மானங்களை உரிய முறையில் எடுக்கத் தவறியதன் காரணமாகவே இந்நாடு, கடந்த காலங்களில் பல பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்ததாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அஸ்வெசும சமூக நலத்திட்டத்துக்கு அரச அதிகாரிகளின் பங்களிப்பு தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே சாகல ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அஸ்வெசும சமூக நலன்புரி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் இதுவரையான முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டதுடன், சிறுநீரக நோயாளிகள், அங்கவீனர்கள் மற்றும் முதியோர் கொடுப்பனவுகளுக்காகப் பதிவுசெய்யப்பட்ட அனைவருக்கும் அந்தக் கொடுப்பனவுகளை வழங்குமாறு சாகல ரத்நாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக இதுவரை அமுல்படுத்தப்பட்டு வந்த சமூர்த்தி அபிவிருத்தித் திட்டத்துக்குப் பதிலாக அறிமுகப்படுத்தப்பட்ட அஸ்வெசும சமூக நலத் திட்டத்தை நடைமுறைப்படுத்து-வதற்காக பயனாளிகளை இனங்கண்டுகொள்ளும் செயல்முறையை ஒழுங்குபடுத்த வேண்டியதன் அவசியத்தை விளக்கிய சாகல ரத்நாயக்க, இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களைக் கேட்டுக்கொண்டார்.

இந்த வேலைத்திட்டத்தில் இருந்து தற்போது ஒதுங்கியுள்ள சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பங்களிப்பைப் பெற்றுக்கொண்டு அஸ்வெசும திட்டத்துக்காக இதுவரை கிடைக்கப்பெற்ற மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளைத் தீர்த்து, தகுதியானவர்களை அடையாளம் காணும் பணியைத் துரிதப்படுத்து-வது தொடர்பாகவும் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இந்த வேலைத்திட்டத்தை காலத்துக்கேற்ப நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி முன்னெடுப்பதன் முக்கியத்துவத்தையும் சாகல ரத்நாயக்க சுட்டிக்காட்டியுள்ளார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# 18,000 தற்காலிக சேவையாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க விசேட குழு

## சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய கூறுகிறார்

டெங்கு ஒழிப்புப் பிரிவு ஊழியர்கள் உட்பட அரச சேவையில் பல துறைகளில் சேவையில் உள்ள 18 ஆயிரம் தற்காலிக சேவையாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பில் விரைவில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வின் போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

சுகாதார அமைச்சின் டெங்கு ஒழிப்பு பிரிவு ஊழியர்கள் உட்பட அரச சேவையில் பல துறைகளிலும் உள்ள தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தரநியமனம்வழங்குவது தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட்டு பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



அத்துடன் இவ்விடயம் தொடர்பில் நான்கு அமைச்சரவைப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. தற்காலிக சேவையாளர்களுக்குசேவையாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பில் ஆராய்வதற்கு அமைச்சரவை உறுப்பினர்களை உள்ளடக்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 18 ஆயிரம் ஊழியர்கள் தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் பல்வேறு துறைகளில் காணப்படுவதுடன் அவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி பிரதமர் தினேஷ் குணவர்தனவின் தலைமையில்நாடாளுமன்றக் கட்டடத்தில் கூடி இறுதித் தீர்வு ஒன்றைமேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும்இதுஓர் அரசியல் பிரச்சினையல்ல. இது ஒரு மனிதாபிமான பிரச்சினை என்பதால் அந்த நோக்கத்தில் இந்தப் பிரச்சினை பார்க்கப்படும். இந்தப்பிரச்சினையைத்தீர்க்க வேண்டும் என்பதில் நான் உட்பட அனைவரும் ஒரே நிலைப்பாட்டில் உள்ளோம். - என்றார். (05)

## கட்டுநாயக்கவில்

# தரையிறங்க முற்பட்ட விமானத்தால் விபரீதம்

கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்க வந்த விமானம் ஒன்று திடீரென மீண்டும் மேலே உயர்த்தப்பட்டதால் கீழிருந்த வீடுகள் மற்றும் சொத்துகளுக்கு சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

சிங்கப்பூரில் இருந்து பறந்து வந்த இந்த விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்குவதற்காக வந்த நிலையில் விமானம்மிகவும்தாழ்வாகப் பறந்ததால்விமானிதிடீரென விமானத்தை மேல்நோக்கிச் செலுத்தியுள்ளார்.

அந்நேரம் விமானத்தின் எஞ்சின் வெளியிட்ட அதிக சத்தத்தாலும் அதனால் தொடர்ச்சியாக வெளியான பலத்த காற்றையும் அதிர்வையும் வெளியேற்றியுள்ளது. இதனால் குறித்த பகுதியில் உள்ள வீடுகளுக்குப் பெரும்சேதம்ஏற்பட்டுள்ளது.

இந்த விமானத்தினுள் 292 பயணிகளும், 12 விமான ஊழியர்களும் பயணித்ததுடன் இந்த விமானத்தின் ஓர் இயந்திரம் மாத்திரம் 75 ஆயிரம் குதிரைவலுசக்திகொண்டது. இந்நிலையில், குறித்த விமானம் இரு இயந்திரங்களைக் கொண்டது.

தாழ்வாகப் பறந்து தரையிறக்க முற்பட்ட இந்த விமானம் பயணிகளின் பாதுகாப்புக் கருதி திடீரென மேலுயர்த்தப்பட்டதுடன் இதனால் விமான நிலையம் தொடக்கம் கடவல மங்கலா ராம விகாரை வரையான 5 கிலோமீற்றர் நிலப்பிரதேசத்தில் அமைந்துள்ள வீடுகள் சொத்துகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் புதன்கிழமை காலையில் இடம்பெற்றுள்ளது. (05)



# மலையக மக்களுக்குக் காணி உரிமம் வழங்குவது தொடர்பில் தனிக் கவனம்

## அமைச்சர் ஜீவன் தெரிவிப்பு

மலையக மக்களுக்கு எவ்வாறு காணி உரிமைகளை வழங்குவது என்பது குறித்ததிட்டமிடல்கள்அமைச்சர்களான ரமேஷ் பத்திரண, ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார ஆகியோருடன் இணைந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாக நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

அத்தோடு மலையக மக்களை மீண்டும் இலங்கையர்கள் என்ற அங்கீகாரத்துக்குள் உள்ளடக்குவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்மாநாட்டில்இதனைத் தெரிவித்த அவர் மேலும்குறிப்பிடுகையில் -

மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து இவ்வாண்டுடன் 200 ஆண்டுகள் நிறைவடையவுள்ளன.

இலங்கையில் இலவச கல்வி , சுகாதாரம் என்பவற்றை அந்த மக்களே ஏற்படுத்திக் கொடுத்தனர். நாட்டைக்கட்டியெழுப்புவதில் அம்மக்களின் பங்களிப்பு அளப்பரியது. அதன்பின்னரே சுற்றுலாத்துறை உள்ளிட்டவை முன்னேற்றமடைந்தன.

அவ்வாறிருக்கையில், மலையக மக்களுக்கு அவற்றுக்கு ஈடான நன்மைகள் எவையும் கிடைக்கப்பெறவில்லை. கொள்கை ரீதியாக எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அனைவரும்ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

எனவே தான் மலையக மக்களை இலங்கையர்கள் என்ற அங்கீகாரத்துக்குள் ஒன்றிணைப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.



சமுர்த்தி, அஸ்வெசும நலன்புரி திட்டத்தில் மலையக மக்களை உள்வாங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நுவரெலியா மாவட்டத்தில் 52 சதவீதமான மக்கள் அஸ்வெசும திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளனர். அது மாத்திரமின்றிபெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பிலும் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சம்பளவிவகாரத்தில்நாள் கூலி முறைமைகள் மாற்றப்படவேண்டும். காணிகளைப் பகிர்ந்தளித்தால் மாத்திரமே அவர்களால் முன்னேற்றமடைய முடியும்.

இது தொடர்பில் அமைச்சரவையிலும் பேச்சு நடத்தப்பட்டுள்ளது. அமைச்சர்களாக ரமேஷ் பத்திரண, ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார என்போருடன் இணைந்து மலையக மக்களுக்கு எவ்வாறு காணி உரிமைகளை வழங்குவது என்பது குறித்த திட்டமிடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தில்உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்கள் உள்ளிட்ட மனிதாபிமானமற்ற , அரசியல் ரீதியான தீர்மானங்களால் மலையக மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்திருக்கின்றனர். அன்று இந்நாட்டில் மலையக மக்களே இரண்டாவது பெரும்பான்மையினராகக் காணப்பட்டனர். ஆனால் அந்தக் காலப்பகுதியில் எடுக்கப்பட்ட தீர்மானங்களால் மலைய மக்கள் நான்காவது இடத்துக்கு பின்தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறான நிலைமைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்காகவே மலையக மக்களை இலங்கையர்கள் என்ற சமுதாயத்துக்குள் இணைப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருக்கின்றோம்.

இதற்கு ஜனாதிபதி அங்கீகாரம் வழங்குவார் எனநம்புகின்றோம். இதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவில் 22 உறுப்பினர்கள் அங்கத்துவம் பெறுகின்றனர். எதிர்வரும் நவம்பரில் மலையகம் 200 தேசிய நிகழ்வை நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கொழும்பில் பிரதான நிகழ்வையும் , ஏனைய 13 மாவட்டங்களில் கிளை நிகழ்வுகளையும் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு பல்வேறு பிரதிநிதிகள் ஒத்துழைப்பு வழங்கியுள்ளதோடு, தேசியநிகழ்வில் பலர்பங்குபற்றவும்எதிர்பார்த்துள்ளனர். - என்றார். (05)

# பொலிஸ் அதிகாரியின் மோ. சைக்கிளையே திருடி எரித்த கில்லாடிகள்

தியத்தலாவ பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று ருடப்பட்டு தீ வைத்து எரிக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டதாக தியத்தலாவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரியாகவும் உப பொலிஸ் பரிசோதகராகவும் தியத்தலாவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவரின் மோட்டார் சைக்கிளே இவ்வாறு திருடப்பட்டு வேறு இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு தீவைத்து எரிக்கப்பட்ட நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

மோட்டார் சைக்கிளை திருடி தீயிட்டு எரித்தவரை கண்டுபிடிக்க துரித விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தியத்தலாவ பொலிஸார் தெரிவிக்கின்றனர். (05)

# கைத்தொலைபேசிப் பாவனை போதையைவிட ஆபத்தானது

## கல்முனை அஸ்-ஸுஹரா வித்தியாலய அதிபர் சுட்டிக்காட்டு

கைத்தொலைபேசி பாவனை என்பது தற்போது போதைப்பொருளை விட அதிக ஆபத்தானதாக மாறியுள்ளது எனத் தெரிவித்துள்ள கல்முனை அஸ்-ஸுஹரா வித்தியாலய அதிபர் எம். எச்.எஸ்.ஆர்.மஜீதியா இதனால் பெற்றோர்கள் தம் பிள்ளைகள் மீது அதிக அக்கறைசெலுத்தவேண்டும் எனவும்வேண்டுகோள்விடுத்துள்ளார்.

பிள்ளைகள் அதிகளவிற்கு கைத்தொலைபேசியைப் பயன்படுத்துவதால் மனநோயாளர்களாக உலாவித்திரியும் நிலையேற்படும் எனவும் எச்சரித்துள்ள அவர் நாம் அனைவரும் ஒன்றினைத்து சமூகப்பொறுப்புள்ள நற்பிரஜையாக மாற வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கல்முனை லீனத் பாலர் பாடசாலை சிறுவர் சிறுமியர்களின் பட்டமளிப்பு விழாவும் வருடாந்த நிகழ்வும் அண்மையில் நடைபெற்ற போது அதிதியாகக் கலந்துகொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



மேலும் அவர் தனது கருத்தில் தெரிவித்தவை வருமாறு -

முன்பள்ளிப் பிள்ளைகளின் ஆரம்பம் வீடுகளிலேயே ஆரம்பமாகின்றது. பெற்றோர்கள் எப்போதும் அதில் கவனத்திற் கொள்ள வேண்டும். மூன்று அல்லது நான்கு அல்லது ஐந்து வயதில் குழந்தைகளைச் சேர்த்து விடுகின்றீர்கள். இது ஆபத்தானது. ஐந்து வயதே முன்பள்ளி செல்ல சிறந்தது. பெற்றோர்களாகிய நீங்கள் பிள்ளைகளை முன்பள்ளியில் சேர்த்துவிட்டு உடன் தன் பிள்ளை எழுத வேண்டும் வாசிக்க வேண்டும் என ஆசிரியர்களைத் தொல்லைப் படுத்தாதீர்கள்.

முன்பள்ளிக் கற்றல் என்பது பிள்ளைகளைத் தரம் ஒன்றுக்கு போக முன் ஆயத்த நிலைப் பயிற்சிகள் செய்வதற்காகதான். எனவே, இம் முதற்படிக்கு நாம் என்ன செய்யவேண்டும். பிள்ளைகளுக்கு தசைநார்ப் பயிற்சி உடலியக்கம் திறன் செயற்பாடுகள் வடிவமைக்கப்பட்டு திட்டமிட்ட வழிகாட்டலில் இடம்பெறுகின்றது. பாடுதல், ஆடுதல், ஒட்டுதல், வெட்டுதல், கிழித்தல் மணல் மண்ணில் விளையாடுதல் பறத்தல் இழுத்தல் என பல்வகைப் செயற்பாடுகளூடாகவே பயிற்சிகள் வழங்கப்பட்டு வளர்ச்சியடைந்துவரும் கைகளைப் பலப்படுத்தவும் உறுதிப் படுத்தவும் மேலும், விளையாட்டு மணி அடித்தால் பந்தை அடித்தல்,சுத்தம் செய்தல், துடைத்தல் பிடித்தல் போன்ற பல்வேறு செயற்பாடுகள் வழங்கப்படுகின்றன.

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் பிள்ளைகள் தரம் ஒன்றுக்கு தயார்ப்படுத்தும் ஆரம்ப நிலையாகும். அதை விட்டு தனது பிள்ளை எழுத வேண்டும். வாசிக்க வேண்டும் என ஆசிரியர்களைத் தொந்தரவு படுத்தாது பயிற்சிகளை பிள்ளைகள் ஆரோக்கியமாகப் பெற உதவ வேண்டும். எதையும் திணித்து அவசரப்படுத்தினால் தீங்கு தான் பின்விளைவாக அமையும். பிள்ளைகளின் முதிர்ச்சி பயிற்சி இரண்டும் ஒருங்கிணைந்து உரிய காலத்தில் எழுத வாசிக்கப் பழகும் என்ற நல்ல செய்தியை பெற்றோர் பெற்று செயற்பட அனைவரும் ஒத்துழைப்பு வழங்க முன்வாருங்கள்.

அத்துடன் கைத்தொலைபேசி பாவனை என்பதும் தற்போது போதைப் பொருளை விட ஆபத்தாக அமைந்துள்ளது. அன்றாட ஊடக செய்திகளில் கைத்தொலைபேசி குற்றங்கள் அதிகரிப்பு என்ற செய்தியே இடம்பிடித்துள்ளது. இதனால் பெற்றோர்கள் தம் பிள்ளைகளில் அக்கறை செலுத்துங்கள். இன்று நாம் வாழும் உலகம் முழுவதும் கைததொலைபேசி பாவனைக்குள் உள்வாங்கப்பட்டு விட்டது.

நாம்எதைச்செய்வதென்றாலும் எம் தேடல் கைத்தொலைபேசியில் தங்கி உள்ளது. இந்தப் பழக்கம் தற்போது சிறுவர் முதல் முதியோர்வரையும் ஆட்கொண்டு விட்டது.

இதனால் அனைவரதும் சிந்திக்கும் ஆற்றல், வாசிப்புத்திறன், புதுமைகள் படைக்கும் திறன் என பல திறன்களை செய்ய முடியாமல் ரோபோக்கள் போல் இயங்குகின்றனர்.

இதனால் நேரம் வீண் விரையமாக்கப்படுகின்றது. ஆன்மீகம் இல்லாமல் போகின்றது. நல்லொழுக்கம் விழுமியம் குறைவடைகின்றது. கல்வி பாழாகிறது. பண்பாடுகள் மறைகின்றன. அந்நியப் பண்பாடுகள் நிலைபேறாகின்றன. எதிர்காலம் இன்னும் மோசமான நிலைக்குதள்ளப்படுவதுடன் எதையும் சிந்திக்காத மனநோயாளர்களாக உலாவித்திரியும் நிலைமை தோன்றும்.எனவே தேவைக்கு கைத்தொலைபேசிகளை பயன்படுத்த நாம் அனைவரும்ஒன்றிணைத்து சமூகப்பொறுப்புள்ள நற்பிரஜையாக மாற வேண்டும். - என்றார். (05)

# ஜோன்ஸ்டன் உட்பட மூவருக்கெதிரான வழக்கு விசாரணைகள் நவம்பர் 24 இல்!

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மூவருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரிப்பதற்கான திகதியை கொழும்பு மேல் நீதிமன்றம் நிர்ணயித்துள்ளது. இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க முன்னிலையில் வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்படி, விசாரணைக்கு முந்தைய மாநாட்டை முடித்து வைத்த உயர்நீதிமன்ற நீதிபதி, வழக்கு விசாரணையை நவம்பர் 24 ஆம் திகதி நடத்துவதாக அறிவித்தார்.

சதொச நிறுவன ஊழியர்களை உத்தியோக பூர்வக் கடமைகளிலிருந்து நீக்கியதன்மூலம்அரசாங்கத்துக்கு நஷ்டம் ஏற்படுத்தியதாக முன்னாள் வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சதொச நிறுவனத்தின் முன்னாள் தலைவர் எராஜ் பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பணிப்பாளர் மொஹமட் சாகிர் ஆகியோர் மீது குற்றம் சுமத்தி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை தெரிந்ததே. (05)

# 13ஆவது திருத்த சட்டத்தின் ஊடாக இந்தியாவை சிக்கவைக்கத் திட்டம்

## நாடு கடந்த தமிழீழ அரசு மோடிக்குக் கடிதம்

13 ஆவது திருத்தம் மூலம் இலங்கை இந்தியாவை சிக்கவைக்கின்றதுதமிழ்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதற்கான இந்தியாவின் இராஜதந்திர முயற்சிகளை இதன் மூலம் கட்டுப்படுத்துகின்றது என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கைத்தமிழ்மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கானசர்வதேசசர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கான நடவடிக்கைகளுக்கு இந்தியா தலைமை வகிக்கவேண்டும் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை ஜனாதிபதியை 21 ஆம்திகதிசந்திக்கவுள்ளநிலையில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் உருத்திரகுமாரன் பிரதமர் மோடிக்குக் கடிதமொன்றை எழுதியுள்ளார். ஈழத்தமிழர்கள்மத்தியில்சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கான நடவடிக்கைகளுக்கு இந்தியா தலைமை வகிக்கவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இராணுவ மற்றும் பொருளாதார பலத்தில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் காணப்படும் சமச்சீரற்ற உறவைக் கருத்தில் கொள்ளும்போது இலங்கை போலித்தனத்தையும்மோசமான நம்பிக்கை இராஜதந்திரத்தையும் பின்பற்றுகின்றது எனப் பயன்படுத்துகின்றது என நாடு கடந்த அரசின் பிரதமர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

13ஆவதுதிருத்தத்தின்மூலம் இந்தியாவைச் சிக்கவைக்கும் இலங்கையின் வெற்றிகரமான நகர்வுகளுக்கு இந்தியா அனுமதியளிக்கக் கூடாது என வேண்டுகோள் விடுத்துள்ள உருத்திரகுமாரன் 13 ஆவது திருத்தம் என்றகயிற்றைஇந்தியா அறுத்து எறியவேண்டியதருணம் இது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

1983 ஆம் ஆண்டு கறுப்பு ஜூலையின் 40 வருட நினைவுதினத்துக்கு முன்னர் பிரதமர் மோடிஇலங்கைஜனாதிபதியைச்சந்திக்கவுள்ளதை தனது கடிதத்தில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (05)

# மருந்து ஒவ்வாமையால் நோயாளி உயிரிழப்பு

## கேகாலையில் சம்பவம்

கேகாலை பொது வைத்தியசாலையின் தீவிர கண்காணிப்பு பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த நோயாளி ஒருவருக்கு நுண்ணுயிர் எதிர்ப்பிகளை செலுத்தியதன் பின்னர் ஒவ்வாமை ஏற்பட்டு உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. கேகாலை பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் மிஹிரி பிரியங்கனி இது தொடர்பில் தெரிவிக்கையில், நோயாளியின் உடம்புக்குள் செலுத்தப்பட்டிருந்த நுண்ணுயிர் எதிர்ப்பிகள்தான் அவரது மரணத்துக்கு காரணம் என பிரேத பரிசோதனை அறிக்கைகள் வெளிப்படுத்தியதாகக் கூறியுள்ளார்.

நோயாளிக்கு முன்பு 13 முறை நுண்ணுயிர் எதிர்ப்பிகள் செலுத்தப்பட்டன. மேலும், 14 ஆவது முறையாக அவருக்கு நுண்ணுயிர் எதிர்ப்பிகள் செலுத்தப்பட்டபோதே அவருக்கு ஒவ்வாமை ஏற்பட்டு, பின்னர் மரணத்தை தழுவினார். 57 வயதான கேகாலை பிரதேசத்தைச் சேர்ந்த இவரின் மரணம் தொடர்பில் சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக கேகாலை பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (05)

# இலங்கைத் தமிழர் உரிமைகளுக்காக ரணிலிடம் மோடி வலியுறுத்தவேண்டும்

## ஸ்டாலின் கடிதம்



இலங்கை ஜனாதிபதி இந்தியாவிற்கு விரைவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில் இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பாதுகாத்திடவும் இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றவும் அவர்களது உரிமைகள்மற்றும்சுதந்திரம் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்திடவும் இலங்கை ஜனாதிபதியை வலியுறுத்திட வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் 'இலங்கை ஜனாதிபதி 2022 ஆம் ஆண்டு பதவியேற்றதற்குப் பிறகு முதன்முறையாக 2 நாள் பயணமாக புதுடில்லி வரவுள்ளார். தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையில் பூகோளரீதியானநெருக்கம்மற்றும் வரலாற்று பொருளாதார மற்றும்கலாசாரத்தொடர்புகள் காரணமாக நீண்டகாலமாகப் பல பிரச்சினைகள் நிலுவையில் உள்ளன.

இலங்கை ஜனாதிபதியுடனான பேச்சின் போது தமிழ்நாட்டு மக்களுக்கு மிகவும் கவலையளிக்கும் இரண்டு முக்கிய பிரச்சினைகளான கச்சத்தீவை மீட்பது மற்றும் இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாகவும் இலங்கையில் உள்ள தமிழ்பேசும்மக்களின் நியாயமானகோரிக்கைகளை நிறைவேற்றி. அவர்களின் உரிமைகள்மற்றும்சுதந்திரம் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்தல் வேண்டும். கச்சத்தீவை மீட்பது மற்றும் இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும்.தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் அடிக்கடி தாக்கப்படுவதும் கைது செய்யப்படுவதும் முற்றிலும் தடுக்க வேண்டும். இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்களின் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை மீட்க வேண்டும்.

மீனவர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் இரு நாட்டு அதிகாரிகளையும் உள்ளடக்கிய மறுசீரமைக்கப்பட்ட கூட்டுப் பணிக்குழு 2016 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இதுவரை ஐந்து சுற்று கூட்டுச் செயற்குழு கூட்டங்கள்நடத்தப்பட்டுள்ளன. கடைசியாக மார்ச் 2022 இல் இதுதொடர்பான கூட்டம் நடைபெற்றது. இருப்பினும் இந்தப் பிரச்சினைக்கு இதுநாள்வரைஒருசுமுகமான தீர்வுஏற்படவில்லை. எனவே, உரிய காலத்தில் கூட்டங்கள் நடத்தி ஆலோசனைகள் மேற்கொள்வதன் மூலம் மீனவர்களிடையே நம்பிக்கையை உருவாக்கவும் பயனுள்ள தகவல் தொடர்புகளை எளிதாக்கவும். சுமுகமான மீன்பிடி நடவடிக்கைகளை உறுதிப்படுத்தவும் இயலும்.

1956 ஆம் ஆண்டு முதல் இலங்கைத் தமிழர்களின் உரிமைகளை நிலைநிறுத்துவதிலும் கோரிக்கைகளை நிறைவேற்றுவதிலும் தமிழ்நாடு அரசும் திமுகவும் உறுதியாக உள்ளது. மேலும் இலங்கையில் உள்ள தமிழர்களின் சமூக அரசியல் பண்பாடுமற்றும்பொருளாதார உரிமைகளைப் பாதுகாத்து அவர்கள் இலங்கையின் சமமான குடிமக்களாக கண்ணியமான வாழ்க்கையை வாழ வேண்டியது அவசியமாகும். இந்த நோக்கத்துக்காக இலங்கையில் உள்ள தமிழர்களின்கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு ஆக்கபூர்வமான உறுதியான தீர்வைஎட்டுவதற்குஇலங்கை ஜனாதிபதியிடம் பிரதமர் வலியுறுத்திட வேண்டும் என முதல்வர் கடிதத்தில் தெரிவித்துள்ளார். (05)

# வவுனியா நகர பகுதியில் தீப்பற்றிய உணவகம்



வவுனியாநகரில்அமைந்துள்ள உணவகமொன்று புதன்கிழமை இரவு 8.25 மணியளவில் திடீரென தீப்பற்றியமையையடுத்து பலத்த போராட்டத்தின்மத்தியில்தீயணைப்பு பிரிவினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

கண்டி வீதியில் இரண் டாம் குருக்கு வீதி சந்தியில் அமைந்துள்ள பிரபல உணவகமொன்று இரவு திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

இதனை அவதானித்த பொதுமக்கள், வவுனியா நகரசபை தீயணைப்பு பிரிவினருக்கு தகவல் வழங்கியமையினையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு பிரிவினர் பலத்த போராட்டத்துக்கு மத்தியில் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதனால் தொடர்ச்சியாக அமைந்துள்ள வர்த்தக நிலையங்களுக்கு தீப்பரவல் ஏற்படாத வண்ணம் தீ கட்டுப்படுத்தப்பட்டது.

எனினும் இந்தத் தீப்பரவலுக்கான காரணம் எரிவாயு சிலிண்டர் வெடிப் பாக இருக்கலாம் என சந்தேகிக்கின்ற போதிலும் மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இந்தத் தீப்பரவல் காரணமாக உணவகம் பகுதியளவில் சேதமடைந்துள்ளமையுடன் எவ்வித உயிர்ச்சேதங்களும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# பெண்ணுடன் தகாத உறவில் இருந்த படத்தை காட்டி நகைகள் அபகரிப்பு

## சந்தேகநபரான இளைஞர் கைது

தவறான உறவில் ஈடுபட்டபோது பிடித்த புகைப்படங்களை வெளியிடப்போவதாகக்கூறி பெண் ஒருவரின் தங்க நகைகளை வலுக்கட்டாயமாகஅபகரித்துச் சென்ற இளைஞரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர், பெண் ஒருவருடன் தவறான தொடர்பை ஏற்படுத்திக்கொண்டதன் பின்னர், அவரை அறையொன்றுக்குள் அழைத்துச் சென்று, எடுக்கப்பட்ட புகைப்படங்களைப் பெண்ணின் கணவரிடம் காண்பிக்கப் போவதாக சந்தேக நபரான இளைஞர் தெரிவித்துள்ளார்.

பின்னர், அந்த பெண்ணிடமிருந்த 1,785,000 ரூபா பெறுமதியான தங்க நகைகளை இளைஞர் பலவந்தமாக பெற்றுச் சென்றுள்ளார்.

இது தொடர்பில் நீர்கொழும்பு பொலிஸாருக்கு புதன்கிழமை காலை முறைப்பாடு கிடைத்துள்ளது.

இதன்படி, மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோமஸ்வத்த பிரதேசத்தில் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீர்கொழும்பு, கோமஸ்வத்தைபிரதேசத்தை சேர்ந்த 23 வயதுடையவர் ஆவார். (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.07.2023இல் வெளியிடப்பெற்றது.